ஓம்

தத் ஸத்

ஸ்ரீ புவநேஸ்வரி பீடாதிபதிகளான

ஓம் சாந்தி மௌனஸ்வாமிஜி

...ம்ஸ ஸ்ரீ சாந்த ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமிஜி

அவர்கள் அருளிய

ஸ்ரீ பகவத் விஜயம்

ஸ்ரீ புவநேஸ்வரி பீடம்

ஓம்ஸாந்தி ஆஸ்ரமம் (அம்பாள்புரி) அம்பத்தூர்

(Madras)



ஸ்ரீ புவனேச்வரீ பீடாதிபதிகளான
ஓம் சாந்தி மௌனஸ்வாமிஜி

ஓம்

தத் ஸத்

முன்னுரை

'ஸ்ரீ பகவத் விஜயம்' என்பது, பாகவத பக்தி ஞானம் முதிர்ந்த ஸாதுக்களுடைய பெருமையை சொல்ல வந்ததே, ஸ்ரீமத் பாகவதத்தின் ஸாரமாகும்.

இதில் தத்வபர்மாக தனக்குள்ளேயே லீலைசெய்து வருவதை அனுபவமாக காட்டி வரையப்பட்டது!

ஸ்ரீ துருவஸ்வாமி, ப்ரஹ்லாதர், வாமனர், ஸ்ரீராமக்ருஷ்ணவதார, ஸ்ரீ நரஸிம்ஹ மூர்த்தி முதலிய புருஷோத்தமர்களும் நமக்குள்ளேயே இருந்து அநுக்ரஹம் புரிகிறார்கள். நாமும் அவர்களைப்போல ப்ரகாசிக்கலாம் என்பதையும் விளக்க வந்ததே 'ஸ்ரீ பகவத் விஜயம்'.

பக்தி ஞானத்தை அடைந்து முக்தியென்ற மாடியிலேறி ருஷிக்கூட்டங்களுடன் விளையாடமுடியும். என்பதையும்,

தன்னேயேதான் ஈடேற்றிக்கொள்ள வேண்டுமேயொழிய, இன்னொருவரால் கை காட்டி இப்படிப்போ, அப்படிப்போ, என்பார்களேயொழிய தன்னே தானேதான் ஈடேற்றிக்கொள்ள வேண்டும். என்பதையும்,

ஸ்ரீ க்ருஷ்ணுவதார ஒவ்வொரு லீலேயும் ஸாதகனுடைய படிப்படியான நிலேயை உணர்த்தி தியானத்திலாழ்த்தக்கூடியதும்.

ஐந்து தலேயுடைய காளிங்கநர்த்தனமானது இந்திரிய ஜெயம் ஏற்பட்டு மனஸை ஒளிமயமாக்கவேண்டும்.

தியானத்திற்கு இடையூறு செய்து வரும் காமக்ரோதாதி ராக்ஷஸர்களே, தாமாக ஒழிந்துவிடுமென்பதை ப்ருந்தாவன லீலே அறியப்படுத்தி, கவலேயில்லாமல் தியானம் பண்ணுயென்பதையும்.

ஸ்ரீ வியாஸாசார்யாள் ஸ்ரீ சுகர்மூலமாக இந்த பாகவத க்ரந்தத்தை வெளியிட்டிருப்பது தத்வார்த்தங்களே தவிர வேறு விதமாக எப்படி இருக்க முடியும்? ஒவ்வொருவரும் படித்து ஆனந்திக்கவேண்டியது.

ஓம் சாந்தி.

ஓம்

தத் ஸத்

துருவம் தோன்றல்

முதல் முதலாக வியாஸ பகவான் மஹா பாரதத்தை பிரஸங்கம் செய்தார். பிறகு அவருடைய உத்தம சிஷ்யர்கள் வியாக்யான ப்ரஸங்கத்துடன் வேதரூபமாக மஹா பாரதம் சமைத்தார்கள்.

பிறகு தன்மகனுகிய ஸ்ரீசுக ப்ரம்மருஷியுடைய ஞான வொளியானது உருவமாக வந்ததுபோல் மஹா பாகவதம் என்ற கிரந்தத்தை எழுதினர். இயற்கை என்பதே தெரியாத சுகப்ரம்ம மஹருஷிகளுடைய பெருமையை புகழ்ந்து அத்வைதத்தை போதித்து மனசாந்தி அடைந்தார்,

பகவான் சொல்கிறார்

இவ்வுலக மக்கள் யாவருக்குமே என்னை அடைய விருப்பமுண்டு! ஆனால் என்னை அடைய விரும்பும்போதே பல இடையூறுகள் வருவதுண்டு! அதை ஸஹித்து அடக்கிக்கொண்டு ஈச்வரனை காணவேண்டும் என்ற திடசித்தத்துடன் முயற்சி செய்வாரானால் விக்நம் தவிர்த்து என்னை கண்டானந்திப்பார்கள்.

2. முதலில் என்னுடைய உருவம் எந்தப்படி உலகத்தில் உலாவுகிறது? என்பதை அறியவேண்டும். அதாவது மனதிற்கு குதூகலமான ஒரு விக்ரஹத்தில் என்னை ஆவாஹனம் செய்து பூஜித்து வருவாரானால் பழக்கத்தில் அதே உருவமாக காக்ஷி கொடுத்து பக்தனை காத்துகொள்வேன்.

3. இடையூறுகளான விக்நங்களை என்னிடமுள்ள பக்தியினாலே தீர்த்துகொள்ளவேண்டும்?

4. என்னுடைய உருவங்கள் பலவாயிருக்கும். நீ எந்த உருவத்தில் முழு நம்பிக்கைவைத்து பூஜிக்கிருயோ அந்த உருவமே பக்தனையும் ஆக்கிவிடுவேன்.

5. பக்தன் என்னுடைய சைதன்யம்நிறைந்த மூர்த்தி ஸ்வரூபமாகும்போது எல்லாவித மூர்த்திகளுடைய தர்சனமும் காட்டி இதால் வந்தது! இதனுல் நாம் நம்முடைய ஆசையால் பிறந்தோம்! என்ற தன்னை வெறுத்துக்கொள்ளும் வைராக்யம் பிறந்து, யோக நிலையுற்று பரமசாந்தியாக உலகத்தில் உலாவி அவனுடைய சரீரமும் மூர்த்திகளாக ப்ரகாசிக்கும்.

6. இதைப்போன்ற என் பக்தனுகிய துருவன், வருங் காலத்தையும், கழிந்த காலத்தையும், அறியக்கூடியவனுக என்னை போல் விளங்கிக்கொண்டு உலக மக்களுக்கு கருணையென்னும் ஒளியை காட்டி வீசிக்கொண்டு இருக்கிருன்.

7. ஸ்ரீ துருவன்போல் பக்தியும் சிரத்தையும் தர்மமும் சாந் தமும் எல்லாம் நிறைந்தவனுக எவன் இருக்கிருனே அவனும் நானே! என்ருர்.

8. இந்த ஸ்ரீமன் நாராயணருடைய வாக்யத்தைக்கொண்டே ஸ்ரீவியாஸ பகவான், துருவமண்டலம் திகழும் ஒளியை கண்டு பகவத் பாதர்களான துருவபகவானை துதிப்பதான அவர் சரிதம் வரையப்படுகிறது.

ஹே துருவா ! என்று ஒருதரம் சொன்னால் இந்திரிய சஞ்சலமும் கொடிய பாபங்களும் நெருப்பில் வீழ்ந்த பூச்சிபோல தீர்ந்து விடும். இது பரமார்த்தம் என்கிறார்.

நம் ஹ்ருதயத்தில் பரமார்த்தமாக விளங்கும் ஒரு தேஜஸு விளங்குவதுபோல, சூரிய வம்சத்திலெ கதிர் விளங்கும் உத்தான பாத மஹாராஜனுக்கு (ஸுருசி ஸுனீதி)என்ற இரண்டு பத்நிகள் உண்டு என்பது உலகத்திற்குத் தெரியும். அழகுடனிருந்தாலும் தனக்கு ஸந்தான பாக்யமில்லாததைக் கண்டு வருத்தத்துடன் நினைத்து மனம் நொந்துகொண்டிருந்தான். ப்ரவிருத்தி நிவர்த்தி என்ற இரண்டு, தம் மனதிற்கும் ஏற்பட்டால்மட்டுமே நிவர்த்தியை செய்து தன் தேஜஸை மறைக்காமல் ஒளியுடனிருக்க செய்ய முடியுமல்லவா ?

இந்தப்படி நிவர்த்திக்கு வழிகண்டு சிலதுநாள் ஸ்ரீமன் நாராயணனை பூஜித்து தவ பயனாக ஒரு மாங்கனியை பெற்று வந்து தன்னிஷ்ட பத்னியாகிய ஸுருசியிடம் கொடுத்தான். சில அற்ப ஸந்தோஷிகள் பகவானை ஆராதிக்கும்போது பல ஸித்திகள் கிடைப்பதால் நிவர்த்தியை மறந்து ப்ரவிருத்தியில் விழ்வது ஸஹஜமல்லவா? அதேபோல தம் மூத்த பத்நியாகிய ஸுனிதியை மறந்து ஸுருசியான இளையாளிடம் கொடுத்து ஸந்தோஷப்படுகிறார். எப்பொழுது ப்ரவிருத்தியில் மனம் ஊன்றி விட்டார்களோ, அப்பொழுது நிவர்த்தி தோன்றாது. அதேபோல ஸுனிதியை நீக்கிவைத்து, மறைவாக யிருந்து தான் மட்டுமே இந்த மாங்கனியை சாப்பிடவேண்டுமென்று எண்ணம்கொண்ட ஸுருசியானவள், தேவகனியை அறுத்து உள்ளேயிருக்கும் சதையை மட்டும் சாப்பிட்டு அதன் பீஜத்தையும் தோலையையும் தனியாக போட்டு நிவர்த்தியை மறந்தவளாக இருந்தாள். அரசனும் தன்னை மோஹித்த கூடையானது மூடி கொண்டிருந்தது. இவை எல்லாம் ஒன்றும் அறியாத ஸுனிதி ஸ்ரீமன் நாராயணனை துதித்

துக்கொண்டு இருந்ததை பகவான் பார்த்ததும் ஒரு கூலி ஆளாக போய், பகவான் கொடுத்த அருள் கனியிலெ ருசிபாகமென்றும் ருசியில்லா பாகமென்றும் வேற்றுமையை காட்டிய ஸுருசிக்கும் ராஜனையும் பாடம் படிப்பிக்க கருதி அங்கேபோய் கீழே இட்டிருந்த மாங்கொட்டையையும் மேல்தோலையும் எடுத்து ஸுனீதியிடம் கொடுத்து சாப்பிடசெய்து தானொரு அயலானைபோலிருந்து மறைந்துவிட்டார்.

எவ்விதமாக பக்ஷபாதம்கொண்ட அரசனுக்கு ப்ரவிருத்தியினால் நிவர்த்திதோன்ருது போனாலும் நிவர்த்தி எப்பவும் நிவர்த்தியாகவே இருக்குமென்பது மறைவான விஷயமல்லவா?

ஸுனீதியும் கர்ப்பமாகி குழந்தையை பெற்ருள். ஸுருசியும் கர்பமாகி குழந்தையை பெற்ருள். ஒருவள் அரண்மனையிலெ, இன்னொருவள் வனம்போலுள்ள தோட்டத்திலெ. தோட்டத்திலெ ஜனித்த குழந்தையின் தாய்க்கு ஒரே ஒரு ஆள்தான். அரண்மனையில் ஜனித்த குழந்தையின் தாய்க்கு ஊரெல்லாம் உண்டு!

இரண்டும் வளர்ந்து வருகிறது. ப்ரவ்ருத்திதான் வளந்து கொண்டே இருக்கும். நிவர்த்தி அடக்கமாக இருந்து வேலைகளை செய்யுமல்லவா? ஸுனீதியின் வேலைஆள் குழந்தைக்கு துருவன் என்று பேர் திகைந்து இருப்பதால் துருவன் என்றே ஸம்மதித்து கொடுத்தார். அரண்மனையிலோ எல்லாவித உத்தமங்களும் இருப்பதால் உத்தமன் என்று சூட்டினர்.

ஒரு ஸமயம் நிவர்த்தி மார்க்கத்தில் இருந்து பிற்பாடு ப்ரவிருத்தி மார்க்கத்தில் நழுவியிருந்தாலும் ஒரு ஸ்மயம் நிவர்ததி கிளம்பி அருளைகாட்ட வரும்போது அருள் வேண்டாமென்று தள்ளுவதும் உண்டு. எதனல் தம்முடைய துர்செயலானது நன்மை செய்யவொட்டாது தடுக்குமல்லவா? அதேபோல ராஜா விடம் ஸுனீதிக்கு பிறந்ததான (நிவர்த்திக்கு பிறந்ததான தேஜஸு என்ற மகன் கிட்டெவரும்போது) துருவன் குழந்தை வரும்போது ப்ரவிருத்தியால் மதோன்மத்தனுயிருந்த ராஜாவான வன் உத்தமனை மடியில் வைத்து இருப்பதை கண்டதும் தானும் மடியில் ஏறினுன். இதை கண்டதும் ப்ரவ்ருத்தியான ஸுருசி

வந்து (தேஜஸை) துருவனை தள்ளி, நீ போய் தபம் புரிந்துவா என்று சுண்டக்காய் யானைக்கு உபதேசிப்பதுபோல சொல்லி கீழே இறக்கி துரத்திவிட்டாள்.

தேஜஸாகிய துருவன் தாயாகிய நிவர்த்தியிடம் வந்து, குருவாகிய யோகத்தை அடைந்து ஸ்ரீமன் நாராயணனை தன்னுள்ளே கண்டு பரமாத்மா ஸ்வரூபம்விளங்கி தாயிடம் வந்து சொல்கிறார் அம்மா எல்லாவித மங்களங்களுக்கும் மேலான ஒரு வஸ்துவை நாரதர் அருளால் கண்டேன். அவர் என்னிடம் நீ அரசு புரிந்து தர்மார்த்த காமமோக்ஷத்தையும் கொடுக்கும் பரந்தாமனுடைய புகழை உலகில் நிலைநாட்ட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். "நான் எவ்வளவு! இத்தனை பெரிய பாரம் என்னால் சுமக்கமுடியாது இப்போதே உங்கள் பாதகமலங்களாகிய கங்கையில் மூழ்கி அடைக்கலம் புகுந்துவிடுகிறேன்! என்று எவ்வளவோ கெஞ்சியும் அவர் ஸம்மதிக்கவில்லை. நீ அரசாளு! நான் வந்து உன்னுடைய யோக க்ஷேமங்களை வஹித்து நடத்திவைக்கிறேன். நீ ஸாக்ஷியாக இருந்தே ஆகவேண்டும் என்று உத்தரவு

இட்டிருக்கிருர், என்ருன். இதைக்கேட்டதும் தாய் ஸுனிதிக்கு ஆனந்த குதூகலமடைந்த முகவொளியுடன் இருந்தாள். இந்த ஸமயம் உத்தானபாத ராஜாவும் அயல்நாட்டு தேச கலகம் ஏற்பட்டு யுத்தத்திற்கு போனதை உணர்ந்து, தான் ஒருவனே அந்த யுத்த களத்தில் குதித்து ஸ்ரீமன் நாராயணர் கிருபையால் சத்ருக்களை ஜயித்து ஜயபேரிக்கையுடன், மூர்ச்சித்து கிடந்த அரசனை உத்தமனையும் தேரில் வைத்து ஸாரத்தியம் வஹித்தவனாக துருவன் அரண்மனை அடைந்து கொலுவேறினன். கொலுவேறுவதைகண்டு ஸுனிதியும் ஓடிவந்து ஆசீர்வதித்தாள். அபபா மகனே! நீ என் வயிற்றில் பிறந்தாலும் ஸாக்ஷாத் ஸ்ரீமன் நாராயணருடைய அம்சமேயாகும். என்னவென்ருல் உன்னை பெற்ற ஸமயங்களிலெ என்னை கர்ாத்து ரக்ஷித்து உன்பேர் சூட்டி காவல்புரிந்த தயானிதியாகிய ஸ்ரீமன் நாராயணர் ஒரு கூலியாளாக வந்து காப்பாற்றினர் என்று எனக்கு நன்ருக தெரிந்தது. எனக்கு அந்த ஸமயங்களிலெ தோன்றி யிருந்தால் அவரை அந்தப்படி கஷ்ட வேலைக்காரனக செய்திருக்கமாட்டேன். ஆபத்

பாந்தவனுகிய கோவிந்தன் உன்னை கார்த்து ரக்ஷிக்கட்டும். அவரை ஏவலாளாக செய்த நான் கோவிந்தருக்கு என்ன கைமாறு செய்யப்போகிறேன்! ஒன்றுமில்லை! எனக்கு பதிலாக அவருக்கு (கோவிந்தனுக்கு) பிரியமாயிருப்பதான தர்மார்த்த காமமோக்ஷங்களுடைய நிலைமையை உலகத்திலே நிலைநாட்டி என்னுடைய அபசாரமென்னும் பிழையை தீர்த்துகொள்ள எண்ணுவதை நீ பூர்த்தி செய்யவேண்டும்! ஸ்ரீமன் நாராயணருடைய தேஜஸை பெற்று விளங்குவாயாக என்று ஆசிகூறினுள். எப்போது ப்ரவிருத்தியை ஜயித்து நிவர்த்தி மார்க்கத்தில் ஈடுபட்டு தேஜஸு விளங்குகிறேதா அப்பொழுது ஒரு சத்ருவும் வாலாட்டாது. யாவும் அடங்கிவிடும்.

ஸுருசியானவள் ஓடிவந்து துருவன் காலில் விழவந்ததும் தடுத்தார். ஏன், தன்னுடைய மாங்கல்ய பிக்ஷையளித்தவனல்லவா? மகனுயிருந்தாலும் என்ன? யாராயிருந்தாலுமென்ன! மன்னிப்பு கேழ்க்கவேண்டுமென்ற எண்ணமுள்ளவளாய் நின்ற ஸுருசியை பார்த்து (கருணை பார்வையால் பார்த்து) "அம்ம

நீயே எனக்கு குரு. நீர் அன்று தபம் புரிந்துதான் இங்கே வரலாம்! என்று சொன்ன வாக்யமே என்னை இந்த பதவியில் இருக்கசெய்தது என்பதை மறக்கமுடியாது. ஆகையால் வருத்தம் வேண்டாம்! ஸூரிய வம்சமே ஒளியுடன் வளரவேண்டும் என்று ஸதா நினைத்து நித்ய கர்மானுஷ்டானம் செய்து வாருங்கள் என்று ஸமாதானப்படுத்தி யாவரையும் அனுக்ரஹ பார்வையாக அரசு புரிந்துவந்தார்.

தர்மார்த்த காமமோக்ஷங்களையும் கொடுப்பதுபோல ராஜ்ய பாரம் செய்து கடைசியாக மறைவான சரீரத்தை பெறும்போதும் சைதன்ய ஸ்வரூபமாக சுழன்று மேல் கிளம்பி சுதர்சன சக்ரம் போல திகழும் துருவ மண்டலமானது இன்னும் நாம் பார்த்து ஆநந்த மடைந்து புருவமத்தியில் திருகோண ஜோதியைகண்டு நாமும் துருவம்போல ப்ரகாசிக்கவேண்டும்.

எப்பொழுதும் பகவத் தர்சனத்தை தன்னுள்ளே கண்டு நழுவாதிருக்க பழகுவதே பக்தி! இந்த பக்தியிலிருந்துக்கொண்டு

எந்த செய்கையை செய்தாலும் அது நன்மையாகவே முடியும். கெடுதியானாலும் நன்மையாக மாறிவிடும். "ஆகவே கெடுதி நல்லது என்ற பாகுபாடுகளை சிந்திக்காமல் எதுவும் நம்முடன் ஈச்வரகிருபை இருந்து கார்யங்களை நடத்துகிறது" என்பதை மட்டும் மறக்காமல் ஜபம், தியானம், முதலிய பூஜைகளையும் செய்து சாந்தியாக இருக்கவேண்டும் என்று நன்றாக ஸ்ரீதுருவ மஹாராஜர் விளக்கியிருக்கிறார்.

ஓம்சாந்தி சாந்தி சாந்தி

மத்ஸ்யாவதார கீதை

முன்னால் நான்குவேதங்களை குழந்தைகளாக தூக்கிகொண்டு வந்து இவ்வுலகில் நிலைநிறுத்தி மக்கள் நன்மை அடையவேண்டுமென்றுள்ள எண்ணம் கொண்டவராக வேதங்களை உற்பத்தி செய்தார். அதன்படி படித்து அதனுள் கருத்தை அறிந்து,

வேதம் பிறக்குமிடமான ஆத்மாவை தன்னிடம் நிலைநிருத்தவே, மத்ஸயாவதாரமாக கொண்டு வேதங்களை எடுத்து காண்பித்தார். பகவானும்கூட மீனை எடுத்ததன் அர்த்தமாவது, நீயும் வேதங்களை படித்து வேதங்களுடைய பெருமையை அறிய வேண்டுமானல் ஆழ்ந்த ஜலத்தில் அங்குமிங்கும் ஓடும் மீனைபோல உன் அறிவைகொண்டு வேதங்களை துளாவி வேதம் பிறந்த இடமாகிய மடுவை அடையும்போது வேதங்கள் குழந்தைகளாகி, தன்னிடம் வாஸம் செய்கிறது. இதனல் தன்னுத்மாவை பதரவிடாது ஒரே நிலையிலிருக்க செய்வதிலிருந்து இன்றுமுள்ள நம்மை சுற்றியவர்களையும் வேதபிருமணர்களாக்கிவிட்டு தான் அடங்கிவிடுவதை உணர்த்தவே மத்ஸ்யாவதாரமாக கொண்டாரென்பதை நாம் அறியவேண்டும். வேதங்களை படிக்காமலிருந்தாலும் ஸற்குருவுடைய உபதேசத்தாலே விசார ஸாகரத்திலெ மீனைபோல மனதைகொண்டு வேதங்களைகாண முயலும்போது மனமும் ஆத்மாவும் கூடும்போதுள்ள சப்தமானது உண்டாகி, வேதங்களாக பரிணமிப்பதை கேட்டவன், அந்தந்த சப்தங்களை அவ்வப்போது

வரைந்து வைத்து வேதபுருஷனாக தோன்றுகிறான். இந்த அவதாரமானது ஸாயூஜ்யத்தை உணர்ந்தவர்களாலேயே வரையப்பட்டிருப்பதால் தன்னுடைய அனுபவமே பலமாதிரி தன்னுள்ளே விளங்கி காட்டுமென்பதை வற்புறுத்துகிறது.

வேதமுணர்ந்து விமலத்தை நிறுத்து!

சாந்தி.

கூர்மாவதார கீதை!

ஆமையானது எந்தவிதம் தன் அங்கங்களை உள்ளே இழுத்தும் வெளியே விட்டும் தன்னிச்சைப்படி செய்கிறதோ அதே போல உன்னுடைய மேல்பார்வையில் தேகத்திலிருக்கும் இந்திரியங்களை அடக்கவேண்டும். பஞ்ச பூதங்களாகிய இவ்வுலகில் காணும் உயிர்களெல்லாம் தன்னுருவம் என்றதயை பிறந்துவிட்டால் மட்டுமே இந்திரியங்களையும் இந்திரியங்களுக்கு ஆதாரமான பஞ்ச பூதங்களையும் உன்னுடைய ஆழ்சியில் கடமைபட்டவர்

களாய் அடங்கி இருக்கவேண்டும். அப்போது மனதிற்கு ஸ்வரூப மான சந்திரனுடைய தேஜஸினுல் நிலாவுண்டாகி அதற்குபின்னுல் விளங்கும் சிதாகாயம் அகண்டமாக கண்டதிலே யாவும் ஒரே வெளியாகுமென்பதை கண்டவனே கூர்மாவதார புருஷனுவான்.

பாலாழியில் அம்ருதமதனம் செய்யும்போது மந்திர மலையை தாங்க கூர்மமாக அடியில் தாங்கி, இருந்தபோதுதான் பலவித தேவர்களும் ஸ்ரீதேவியும் அஷ்டதிக் பாலர்களும் வந்தார்கள். அம்ருத கலசமும் கிடைத்தது. இதைபோல எல்லாவற்றையும் கடந்தபொருள் எப்படியோ எந்த ஸமயத்திலோ எந்தவிதமோ எதனுடலையாவது தாங்கிகொண்டு, முயற்சிசெய்யும் பக்தாளை காப்பதற்கு காத்துக்கொண்டு இருக்கிறது என்பதை மட்டும் மறக்கக்கூடாது. பால் கடலிலெ எத்தனை தேவர்கள் எத்தனை அஸுரர்கள்கூட கயிருயிருந்த வாஸுகி, எவ்வளவோ கஷ்ட ஸாத்யத்துடன் கடைந்தாலும், இவற்றிற்கெல்லாம் மேலான ஒரு பொருள் மந்திரமலையை தாங்கிக்கொண்டு கூர்மமாக இராவிட்டால் இவர்களின் கதி என்ன? பார்த்தீர்களா? இதுதான் நாம்

முயற்சி செய்வதானது வீண் போகாதபடி பகவானுடைய ஒரு சைதன்யமானது எப்படியோ வந்து மறைவாக காப்பாற்றுகிறது இந்த உண்மையை அம்ருத கலசம் கிடைத்த பிறகு அதை பூஜித்த போதுதான் உணர்ந்தார்கள். ஒருமுகப்பட்ட மனதைகொண்டு மேலினையுள்ள பொருளை அறிந்து அறிந்து உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பெருங்கி யோகம் கொண்டால் எல்லாவித செயல்களும் " இதனுல் வந்தது? என்று உணர்ந்து சாந்திகொண்டு இருக்கலாம்.

சாந்தி.

வராஹாவதார கீதை !

நீ உள்ளத்தில் தேஜஸை ரஹஸ்யமாக காணப்போகும் போது ரஜோகுணமும் தமோகுணமுமான திருடர்கள் நுழைந்து கெடுதிசெய்ய வருவார்கள். அப்போது ஆத்ம பூமியைகூட மறைந்து பலவிசாரத்திற்கு ஆளாக்கிவிடும். ஒரே நோக்கம் என்ற

ஏகாக்ரசித்தத்தினுலே ஞாஞேதயத்தை வீசி, திருடர்களை ஓட்டி அவரிடமிருந்து ஆத்ம பூமியை வாங்கி அவர்களையும் அடக்கி பரிசுத்த ஹ்ருதயத்திலே வராஹாவதாரமாகிய குண்டலினி சக்தியை எழுப்பி ஆத்ம ஜோதியை நடுமார்பில் கொண்டு வைத்ததும் திக்பாலர்களும் தேவர்களும் சித்தர்களும் முக்தர்களும் வந்து (அந்தர்யாமியாக) பல துதிகளை கேழ்க்கலாகும் இதுவே வராஹனுபூதி என்று உணரவேண்டும். இதை அனுபவத்திலுணர்ந்த யோகியினுடைய உள்ளமானது அகண்டகாரமாக பரமாத்மா சோபிக்கிறது.

சாந்தி.

"ஆத்ம பூமியை அறிய மதம்பிடித்த யானைபோலிரு" ப்ரஹ்லாத கீதை!

ப்ரஹ்லாத ஆழ்வார் தன் வினையை ஜயிக்க சிங்கத்தை போல வைராக்கியத்தை அடைந்து ஸ்ரீமன் நாராயண

ருடைள நாமத்தை ஜபித்து முக்தி மார்க்கத்தை அடைந்தார். தன்னைதானே வென்று ஈச்வரமயமாகி வைகுண்டத்தை அடைந் தார். அதன் ரஹஸ்யயே நம்முள்ளம்.

தேவர்களிடத்திலும் அஸுரர்களிடத்திலும் வேற்றுமை யில்லாத ப்ரஹ்லாதர் உள்ளத்திலெ அடிக்கடிக்குப் வண்ணனை போல ஸ்ரீமன் நாரர்யணருடைய கிருபையானது பரிசுத்தமாக் கிற்று. அதனல் அஸுர சேர்க்கையான பல இடையூறுகளிலெ மயங்காமல் ஒரே பிடிவாதமாக மனதை ஜயித்து இருந்தார். இடையூறுகளை யெல்லாம் சுலபமாக கடந்தார். கடைசியாக மாயை என்னும் அசுரன் தன்னை விழுங்கவரும்போது பகவத் கிருபையினுலே சிங்கத்தை போன்றதாகி யோகம் செய்து மாயையை ஜயித்து நரஸிம்மமூர்த்தியாக தர்சித்தார். மரணத்தை ஜயித்தார். தேவர்களுக்கும் பாடம் படிப்பித்தார். அதாவது சுகமே அனுபவித்துக்கொண்டு இருந்தால் கஷ்டத்தின் நிலையை யும் சுகத்தின் பெருமையை கடந்து மிருப்பதான ஒன்றைகாண முடியாது. ஸுகமும் துக்கமும் சேர்ந்த மனிதனுகபிறந்தால்

மட்டுமே ஸுகத்தையும் கடந்த அதாவது இகபராதீத மாயிருக்கும் பரமாத்மாவை தர்சித்து என்றும் அழிவில்லாத பதமாகிய ஜீவன் முக்தி அடைந்து அவதார புருஷனைபோல ப்ரகாசிக்கலாமென்று தேவர்கள் தோன்றும்படி செய்து காட்டியவர் ப்ரஹ்லாதஸ்வாமி ஒருவரே! இதனால் நாம் தேவதன்மைக்கும் மேலான்தாயுள்ள மனித ஜன்மம் கிடைத்ததை வீணாக்காமல், தன்னுடைய அடக்க வழக்கங்களினாலே சமதமாதி குணமுள்ள சாந்த புருஷனாக இருக்கவேண்டும்.

சாந்தி.

"வினையை தீர்க்க வீர்யம் கோண்டுஇரு"

ஸ்ரீ வாமன கீதை!

ஸ்ரீ வாமன கிதையானது பற்றுதலில்லாமல் எல்லாம் ப்ரம்மார்ப்பணமாக ஸமர்ப்பிக்க வேண்டுமென்பதே இதன் வரலாறு. மஹாபலி சக்ரவர்த்தி நல்லதையும் கெட்டதையும்

தன் குரு அருள் வாக்யபடி ப்ரம்மார்பணமாக தொழில் புரிந்து தத் பொருளை காணவரும் ஸந்தர்ப்பத்திலெ, கடைசியில் பகவா னுக்காகவே தானம் கொடுக்கும்படி நேர்ந்ததை கவனிக்கும் போது அவர் அரசனுக்கரசன் என்றே சொல்லலாம். என்ன வென்றால் பூலோக பாதாள முழுதும் ஓரடியாகவும் சுவர்க்கலோக முழுதும் ஒரு அடியாகவும் அளவுதது வாஸ்தவமே! எப்படி யென்றால் வானுலகத்திலும் பூர்ணசுக மென்பது கிடையாது என்று அளவுகண்டான். பூலோக பாதாள லோகத்திலும் பூர்ண ஸுகம் கிடைக்காது. தற்போது மனிதனாக பிறந்த ஹ்ரு தயத்திலெ தன்னை காண்பதேபரி பூர்ணசுகம் என்பதை நிச்சயிக் கும்போது வானுலகும் மண்ணுலகும் இரண்டு அடியாக தள்ள வேண்டியதுதான். தத்பொருளின் உருவம்வந்து மூன்றாவது பாதத்தை பரிபூர்ணத்தைபெற கிடைக்கும்போது இவைகளில் இச்சை உண்டாகாது. கைலாச சிகரமாகிய சிரஸிலெ மூன்றாவது பாதமாகிய ஸஹஸ்ராரம் விஸ்தார மடையும்போது ப்ரணவ ஒளிக்குள் நுழைந்து கார்த்திகை ஜோதியாக ப்ரகாசிக்கிறது.

இதையே மஹாபலி சக்ரவர்த்தி அடைந்த மஹாபாக்கியமாகும். பகவத் அற்பணமாக செய்து வந்ததின் பயனுனது தன்னை ஜயிக்க வழிகாட்டி குருவையும் கடந்து நிச்சலதன்மையை உணர்ந்த ஸ்ரீ மஹாபலி சக்ரவர்த்தியினுடைய பெருமையானது இன்று வாமன மூர்த்தியாக காக்ஷியளித்து நம்மை ரக்ஷிக்கிறுர்.

அழகுவாய்ந்த விக்ரஹத்தை உள்டத்தில் ஸ்தாபிதம் செய்து உபாஸனை முறையையும் நன்கு விளக்கியிருக்கிறுர்.

ஸ்ரீ பரசுராம கீதை !

ஸப்தருஷிகளில் ஒருவராகிய பரசுராமர் பரசு தரித்து அட்டுழியம் செய்யும் அரக்கர்களை அழித்துக்கொண்டேபோனுர். அந்த நாளில் அவர் அட்டுழியம் செய்யும் அரக்கர்களை கொல்லாவிடில் நாமிப்படி மனிதஉருவம் தாங்கி நிற்க முடியாது. நல்லோர்களை அரசராக்கி அந்த காலத்திலுள்ளதிலெ நல்லதை பொறுக்கி யெடுத்து அரசாக்ஷி செய்ய சொல்லியிருந்து நடத்தி

னர். ஸ்ரீராமாவதாரம் வந்ததும் தன் தபோ சக்தியை முழுதும் அவருக்கு கொடுத்து உலகத்தை காப்பாற்றி மனிதர்களையும் ஞான மய மாக்க வேண்டுமென்றுள்ள எண்ணத்தினாலேயும், தன் தபோ பலனை முழுதும் கொடுக்கும்படி நேரிட்டதினாலும் பகவான் ஸ்ரீராமார்ப்பணம் செய்து தான் ருஷியாக ப்ரகாசித்தார்.

சாந்தி.

ஸ்ரீராம கீதை

பகவான் அயோத்யிலெ தசரத புத்திரராக அவதரித்து தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் பிதிர்க்களுக்கும் திருப்திசெய்து வந்தார். மனிதருக்கும் தேவாதி பிதிர்க்களுக்கும் ரஹஸ்யமாக ஒற்றுமை உண்டு என்பதை காட்டி நம்பிக்கை பிறக்க செய்தவர் ஸ்ரீராம பிரபுவாகும். அவதாரமே ஒரு ரஹஸ்யம். தன் னிச்சைப்படி யில்லாது ஏதோ ஒரு சக்தி லீலை புரிகிறது. அந்த பரமாத்மாவை காண அவர் சரித்திரமே நமக்கு யோகமார்க்

கத்தை காட்டும் ஒவ்வொரு மனிதனுடைய ஹிருதயத்திலும் ஒவ்வொரு ராமனுண்டு ! அந்த ராமனே உணர்ந்தவன் ராமனுக இருப்பான். ராமனே உணராதவன் அவர் சரிதத்தை படித்து மனனம் செய்து ஆத்மாநந்தத்தினுலே ஏகாந்தம்கொண்டு ராமனை அறியவேண்டும். அதுதான்·ஆண்மைத்தனம். அப்படி மனனம் செய்யும்போது நமக்கே அந்த ராமாயணத்தின் சரித்திரம் முழுதும், ஒவ்வொரு அஸுரரும் ஒவ்வொரு தேவர்களான வானர படைகளும் தம்முன் வந்து விளையாடவும் வரும்போது தம்முள்ளத்தில் ஏதோ ஒரு சக்திதானே ராமனுகவும் நின்று ராக்ஷஸர்களான காம க்ரோதமத மாத்ஸர்யங்களான பலதீயர்களை வென்று பரிசுத்த ஹிருதயத்திலெ **ப்ரம்மம்நான் !** என்று ஆநந்த களிப்பு ஏற்படும்.

இந்தப்படி பஞ்ச பூதங்களால் ஏற்பட்ட இச்சரீரத்தை அபிமானங்களாலும் மனவோட்டத்தாலு முண்டாகும் துன்பங்களை ஜயிக்க நான் **ராமன் !** நான் **ப்ரம்மம் !** என்று ஸதா உள்ளத்தில் நினைத்திருப்பாயானுட் பரமாத்மாவாக பிரகாசித்து,

சாந்தியென்னும் நிலாவவ கூடி விளையாடி அகண்டா காரமாக விளங்கச் செய்யும்.

மோக்ஷமென்னும் அயோத்தியா நகரத்திலெ "ப்ரம்மம் நான்" என்ற தசரத மஹாராஜ அரசாக்ஷி செய்துவந்தார். ஒரு அரசனுக்கு செய்யவேண்டியதான இந்திரிய அடக்கம் மனோ ஜயம் முதலிய திடசித்தத்துடன் பிரஜைகளை பாதுகாத்து வந்தார்; இச்சாசக்தி கிரியாசக்தி ஞான சத்தியாகிய மூன்றுமனைவிகளை தன் வசப்படுத்தி உலக க்ஷேமத்தை கருதி அரசு புரிந்து வந்தார். ஞான சக்தி கௌஸல்லையின் மூலமாக உபாஸனைசெய்ய தகுந்ததான ஆத்மா ராமன் பிறந்தார். ஒன்றும் தெரியாத அவ்யக்த வடுவான குழந்தையானதால் தன்னை மூடிய ஜீவனுனவன் தேகமே நான் என்று கர்மவேடருக்கு சான்றிந் தது. அந்த கர்மங்களை ஜயிக்க சிரவணமென்னும் வஸிஷ்டரை வந்தன பூர்வமடைந்து மனனம் என்னும் கௌசிகரை கூடி வைராக்யமென்னும் லக்ஷ்மணருடன் ஆத்மா ராம நடந்து பஞ்சமாபாதகங்களாகிய காடுமலை வனாந்தரங்களை கடந்து

வைராக்கியத்தினலே தீவரமனனமடைப்து ஞான பாணம் தொடுத்து ஆவரணம்மென்னும் தாடகையை வீழ்த்தி இச்சை யென்னும் மாரீசனுக்கு பயம் காட்டி, (ஓ ஆசையே என்னிடம் நீ மறைவாக வந்து பரிசுத்தமாகிய ஹிருதயத்துள் புகுந்து கெடுப்பா யானல் ஞானத்தினலே உன்னை கொல்லுவேன் ! என்று திடமாக பரிசுத்த மனதுடன் நடக்கையில்) விபசார மென்னும் பாறயை மிதித்து ஆசாரமென்னும் அகல்லிகையை கூடி ஏகாந்தமென்னும் மிதிலா நகர் அடைந்தார். (இந்திரியங்களை கட்டுப்படுத்தாமல் அதன் போக்குப்படி நடப்பதே விபசாரமாகும். அதை மிதித்து தள்ளி இந்திரிய ஜயமடைந்து ஆசாரத்துடனிருந்து பூஜைகளும் ஆராதனைகளையும் செய்யும்போது ஏகாந்தம் கிட்டுகிறது) சாந்த மென்னும் ஜனகரை கண்டு பொறுமை யென்னும் கார்முகிலை எடுத்து ஆனந்த ஸீதையை கைகூட்டியவராக கார்முகிலொடித்து ஆநந்த ஸீதையை கூடினர். (ஏகாந்தம் கிடைத்ததும் சாந்த முண்டாகிறது எப்பவுமே ஒரு நன்மை அடைய வேண்டுமானல் பக்கத்தில் எவ்வளவோ கெடுதிகள் அதை கெடுக்கபார்க்கும். ஆன

லதை ஜயித்து தீரனாக இருந்தால் மேல்நோக்கி செல்ல ஸுலபமா யிருக்கும்) ஆநந்தத்துடன் வரும் ஆத்மா ராமன் எதிரில் மத மென்னும் பரசுராமர் எதிர்க்க ஞான பாணம் தொடுத்து என்றும் மதமெழாமலிருக்க செய்து ஆத்மாவிடம் சேர்த்தினார்.

(ஸாதாயணமாக ஆத்மாவானது சிறிது ஆநந்தம் கிடைத்து விட்டால் எல்லாம் நானே என்ற மதம் எழும்பி கெடுக்கபார்க்கி றது. ஞானமிருந்தால் உடனே அதை தடுத்து தன்னை ரக்ஷித்துக் கொள்ளலாம்.) இந்தப்படி மனித ஸ்வபாவத்தின்படி இடம் கொடாமல் தன்னிடமே ஆநந்தமடைந்த ஆத்மாராமன், மோக்ஷ மென்னும் அரண்மனை குஹை துவாரமாகிய அயோத்தியை அடைந்தார். நாடக ஆட்டமென்னும் கைகேகியினுடைய ஏவல் வந்தடைந்ததும் ஜீவன் நானல்லவென்று ப்ரம்மம் தசரதனைகூட அஹம்ப்ரம்ம மென்றுஒன்ருகி அயோத்தியை துறந்தார். (மோக்ஷத்தையும் கடந்து செல்ல வேண்டுமென்ற திடவைராக்ய மிருக்கும்போது இந்திரபட்டம் முதல் கொண்டு ஸகல ஸங்கங் களையும் நாடக ஆட்டம்போல நினைக்கத்தான் தோன்றும்.

விருப்பமுண்டாகாது கர்மங்களிலெ சிந்தையுமுண்டாகாது. ப்ரம்மத்தை நோக்கியே செல்லும் முயற்சியுடைய ஆத்மாவானது.) ப்ரம்ம மெனும் தசரதனை பிரிந்த ஆத்மாவென்னும் ராமன் ஆநந்தமென்னும் ஸீதையையும் வைராக்யமென்னும் லக்ஷ்மணருடனும் கூடி சித்தமென்னும் சரயூ நதி கடந்தார். (ப்ரம்மத்தை மறந்த ஆத்மாவானது மறுபடியும் முயற்சிசெய்து ஐக்ய பாவம் ஏற்பட முன்கண்ட ஆநந்தத்தையும் வைராக்யத்தையும் நழுவ விடாமல் சித்தமதில் பாதுகாத்து காத்து வந்தது.) புத்தியென்னும் குஹனை கண்டு பக்தியென்னும் பரதனைகூடி பாதம் பதிய செய்து விசேபகம் என்னும் சித்திர கூடத்தில் தவம் செய்ய பலவித எண்ணங்களாலே மோதப்பட்டு சித்தமாகிய காட்டிற்குள் அங்குமிங்கும் அலைந்து துன்பமடைந்தாலும் வைராக்யத்தினுலே விட்சேபத்தை ஸஹிப்பு தன்மை வேண்டுமென்பது.

சிந்தனையென்னும் கவந்தனைக்கொன்று ஸந்தோஷ மென்னும் சபரியிடம் சேர்ந்தார்.

(ஸஹிப்பு தன்மையால் சிந்தனையை அடக்கவேண்டும்.)

(நித்யாஸனமென்னும் ஆஞ்சநேயரை கூடி ஆநந்த மென்னும் ஸீதையைபாடி ஸப்த தருக்களென்றும் வாலிமேல் அம்பு எய்து பயமென்னும் இருளை போக்கினர்.

(தினமும் ஆஸனமிட்டு தியானத்திலமர்ந்து ஆநந்தத்தை தேடிக்கொண்டே இருந்தால் மட்டுமே பஞ்சேந்திரங்களும் மனமும் புத்தியும்கூட ஏழு கிளைகளாலேற்படும் பயத்தை நீக்கலாமென்பது)

அபயமென்னும் ஸுக்ரீவனை கூடி வானர படையை ஆதரித்து நித்யாஸன மென்னும் மாருதியை கொண்டு மோஹமென்னும் வாரியை கடந்து லோபியென்னும் இலங்கனியை இடித்து அசுபமென்னும் ராக்ஷதர்களை பயம் கொள்ள செத்தார். (தனக்குள்ளே பயம் நீங்கிய ஆத்மாவானது அபய வாதத்தினாலேதிட வைராக்யமுடனிருந்து மோஹத்தை அடக்கி லோபத்தனத்தை நீக்கி நித்யாஸனத்தினாலே தினமும் தியானகி ஜப அனுஷ்டானங் செய்ய வேண்டுமென்பது).

அசுபமென்னும் ராக்ஷதர்களை நீக்கி ஆனந்தமென்னும் ஸீதையை கண்டு அனுபூதி மேல்கொண்டு எண்ணமென்னும் அசோக வனத்தை அழித்து அஞ்ஞானமென்னும் மாலியவானை ஸந்தேகமென்னும் அக்ஷய குமாரனையும் கிழித்தார். (மோஹத்தையும் லோபதனத்தையும் நீக்கும்போது ஆனந்தம் காண கிடைக்கிறது. அப்போது சித்தமதில் கிளம்பும் எண்ணத்தை அழிக்கவும். அஞ்ஞானமாகிய இருள் படர்ந்ததை ஸந்தேகமில்லா தழிந்துவிட்டு அனுபூதி கிளம்புகிறது.

விபரீதமென்னும் இந்திரசித்தை பழித்து மயக்கமென்னும் பாசத்திலகபட்டு ரஜோகுண மென்னும் ராவணன் எதிர்பட்டு, மௌனமென்னும் அக்நியை பெருக்கி அசுபமென்னும் லங்கயை கருக்கி திடமென்னும் அணையை கட்டி ஸாத்விகமென்னும் விபீஷணனை கூடினர். (சிறிது அனுபூதி கிளம்புதற்குள் மயக்கத்தினலே ஆத்மா கெட்டுண்டு இருந்தாலும், பூர்வ வாஸனையினலே உள் நோக்கிசென்ற சித்தமானது யுக்தியைதேடி அறிந்து இவற்றிற்கு எல்லாம் காரணமாகிய இந்திரியங்களை மனதுடன் சேர்த்து

மௌனம் கொண்டபோது அசுபம் நீங்கி தெளிந்து திடவைராக் யத்துடன் ஸாத்வீகமாக இருக்கும்.)

தமோகுணமென்னும் கும்பகர்ணனை கொன்று ரஜோகுண மென்னும் ராவணனை அதட்டி விபரீதமென்னும் இந்திர சித்த னுடைய மயக்கமென்னும் பாசத்தாலகபட்டு, வைராக்ய மென்னும் லக்ஷ்மணன் தளர, நித்யாஸனமென்னும் ஹனுமான் நிஷ்டையளித்ததும் வைராகயமெனும் லக்ஷ்மணன் எழுந்து விப ரீதமெனும் இந்திரஜித்தை கொன்றார். (ஸாத்வீக குணத்தி லிருந்து வரும்போது ரஜோகுணமும் தமோகுணமும் வந்து மோதுவது ஸஹஜம்! சாத்வீகத்தை கெடுக்க பல விபரீதங்களும் தோன்றி மயங்ககூட வேண்டிவரும். ஆனால் அவைகளை யெல்லாம் நித்யாசனமிட்டு தவம், தியான நிஷ்டை புரிவதால் சுலபமாக நீக்கி வைராக்கியமுடன் இருக்கலாம்.)

ஸஞ்சித மென்னும் மூல பலமெதிர்க்க தீரமென்னும் அஸ் திரம் வதைக்க அசுபவாசனை யென்னும் அஸுரர் தீர்ந்து சுப வாசனையென்னும் வானரர்கள் சந்தோஷித்தார்.

(ஸஞ்சிதம் ஆகாமியம் இவைசளால் ஏற்படகூடிய பல துன்பங்களை திரத்தாலே சஹித்துகொண்டு அசுபவாசனைகளை நீக்கி சுபவாசனையுடன் இருக்கவேண்டும். அதாவது சத் புருஷருடைய சேர்கையாயிருக்கவேண்டும்.)

ஆநந்தம், அவ்யயம், கம்பீரம் இவைகள் நிறைந்த ஞான பாணம் தொடுத்து ரஜோகுணமென்னும் ராவணனை எதிர்த்து நானென்றும் கலசத்தை உடைத்து தசேந்திரியங்களென்னும் ராவணனை கொன்றார்.

(பரிபூரண ஞானத்தினாலே நானென்னும் மமதையை நீக்கி ரஜோகுண கிளர்சியை அழித்து தசேந்திரயங்களையும் ஆநந்த பரவசமாக செய்யவேண்டும்.)

ஆத்மாவென்னும் ராமன் ஆநந்தகமன்னும் ஸீதையை கண்டு மௌனக்கிநியில் குளித்து ப்ரம்மமென்னும் தசரதன் தானாகி ஆநந்த மென்னும் சீதையுடன் மோக்ஷமென்னும்

அயோத்தியில் புகுந்து ஜீவன் நானல்லவென்று ப்ரம்மமே தானுகி ஈச்வர சைதன்யமாக சோபித்தார்.

(மௌனமென்னும் அக்நியை பெருக்கும்போது சித்தமதில் தோன்றும் படைகள் முழுதும் சாம்பலாகி பரிசுத்த ஹ்ருதயம் தோன்றி விஸ்தார வொளிவீசி சச்சிதாநந்த கடலில் எல்லாவித இந்திரியங்களும் கரைந்து ஒரே ப்ரம்மமாக ஜீவப்ரம்ம ஐக்கியத்தை கண்ட ஆத்மாவாக பரமஹம்ஸ ஸிம்மாசன மேறி தர்மார்த்த காமமோக்ஷத்தையும் நடத்த அதிகாரியாக அரசனுக்கரசனுக ப்ரகாசிக்கிறது.)

ரத்நபீட, புஷ்பபீட, ஆநந்தபீட, ஹனுமத்பீட சாம்ராஜ்ய பீட, பரமஹம்ஸபீட, தேஜோமயபீட, சித்பீடமாக சோபித்த ஸ்ரீராமசந்திர மூர்த்தியினுடைய சரிதமானது சித்தாந்தமென்னும் விலாசத்திலெ ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நடந்து வருகிறது. அதை நீ ஆழ்ந்த வேதாந்த விசாரத்தாலெ (இதில் சொல்லப்பட்ட வாக்யத்திருலே) யோசித்து யோசித்து தன்னுள்ளே ஆத்மா வென்னும் ராமமூர்த்தியை ப்ரதிஷ்டை செய்து

உபாசனையினாலே, பழக்கத்தில் அந்த ராமமூர்த்தியேதானாகி பரமஹம்ஸ சாம்ராஜ்யத்திற்கு அரசனாக சோபித்து பரம சாந்தி கொண்டு இருக்க வேணுமென்று உள்ளங்கையில் நெல்லிக்கனி போல விளங்கி காட்டுமென்பது இதைபடிக்கும் ஸாதகன் உணரக்கூடிய விஷயமேயாகும்

இப்படி இந்த உள்ளத்தில்காணும் பல ரஹஸ்யங்களை வெளியிட்டு தானும் (ஸ்ரீராமனாக சோபிக்க வேண்டுமென்று) நான் ப்ரம்மம்! என்று சதா உள்ளத்தில் தியானித்தவர்களாய் இவ்வுலக பற்றுதலை நீக்கியவர்களாய் பரம ஹம்ஸர்களாய் உலகத்தில் உலாவிக்கொண்டு தன்னை அண்டியவர்களையும் ஈடேற்றும் கருணை வள்ளலாகவும் சோபிப்பார்கள் என்பதில் ஸந்தேகமில்லை.

இதை படித்து மனனம் செய்பவர்களும் நான் அடையும் கதியை அடைவார்கள்.

சாந்த கடவுள் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி

ஓம் தத் ஸத்

ஸ்ரீ கிருஷ்ண கீதை

ஸ்ரீமன் நாராயணர் ஸ்ரீ கிருஷ்ணனாக அவதாரம் செய்து தன்னை அணுகிய கோபாலர்களையும் காத்து பல ஆச்சர்யமான லீலைகள் புரிந்து அனுபவத்தையே, போர்களத்தில் அர்சுனனுக்கு ஸாரதியாக யிருந்துக்ககாண்டு கீதோபதேசம் செய்தார். அந்த கீதையினுடைய உட்பொருளே ஸ்ரீ கிருஷ்ண லீலையாகும். இந்தபடி ஸ்ரீவியாஸ பகவானுடைய குருவாகிய ஸ்ரீ கிருஷ்ணனை நினைத்துக் கொண்டே அனுபவங்களை வரைத்து மக்களுக்கு உபதேசம் செய்தார் என்பதை நாம் மறக்கமுடியாது.

ஸ்ரீ வியாஸ ஹ்ருதய மென்னும் யதுகுலத்திலெ, பற்றற்ற தண்மையினலே சித்விலாஸ்த்தை பெருக்கிகொண்டு தியானத்தில் காணும் அனுபவங்களை பாகவதம் என்ற ஒளி கிளம்பி அருள் மேனியாகிய ஸ்ரீ சிருஷ்ணனை துதிக்கிறார்.

ஹே கிருஷ்ணு, உன்னுடைய சைதன்யம் என்னுள்ளே புகுந்து பற்பல அனுபவங்களை காட்டி அருனிய திவ்ய சரிதத்தை நான் கண்டபடி உலக மக்களும் அறிய வேண்டுமென்றுள்ள ஆவலை நாடி வரைகிறேன். நீரே துணையாக இருந்து அதை பூர்த்தி செய்யவேண்டும்.

எது குலம் முழுதும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைய செய்த ப்ரபுவினுடைய சரிதத்தை கேட்ட காதும், கண்ட கண்ணும் ஒரு நிலைப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணுநந்தம் கொள்ளுவாரென்பதில் ஸகதேகமில்லை. பற்பல பக்தர்களுக்கு உபாஸன மூர்த்தியாக இருந்த ஸ்ரீ கிருஷ்ணன் என்னை ரக்ஷிக்கட்டும். ஸ்ரீ கோவிந்தா என் ஆத்மாவாகிய கோவை ரக்ஷித்தருளும்! கேசவா, என்னுடைய இந்திரிய கோசங்களால் ஏற்படும் துன்பத்தை அடக்கியாளும். ஓமனோஹரா, நீர் எந்தந்தவித மெல்லாமோ என்னை ரக்ஷிக்க கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறீர். ஆயினும் நான் உமக்கு கைமாறு செய்வது என்பது ஒன்றுமில்லை. இருந்தாலும் உமக்கும் எனக்கும் நடுவில் கூத்தாடும் மனதை உம்முடைய பாத

கமலங்களில் ஸமர்பித்து கொண்டு என் குறைகளை தீர்த்து கொள்கிறேன்.

சாந்தி.

ஸ்ரீ வஸுதேவர் தேவகி ஞான கர்பத்திலே அவதரித்து அருள் வடுவமாகி மாயையை நந்தகோபாலரிடமிருந்து பெற்று அருள் வடுவை மறைவாக வளர்த்திகொண்டு இருக்கவும் வழி காட்டி சரிரமாகிய சிறச்சாலையில் புகுந்த தம்பதிகள் மாயையை கண்டதும் பிரமித்தவர்களாய் யிருந்தார்கள். இந்திரிய கூட்ட மான ஏவலாளிகள் கண்டதும், மூடமென்னும் கம்ஸனிடம் கொடுத்ததும், கைக்கும் அகப்படாத மாயை உருவம் தரித்துக் கொண்டு "ஏ மூடா; நந்தகோபர் அரண்மனையில் மறைவாக ஒரு அருள் வடிவம் வளர்ந்து வருகிறது அது உன்னை கொல்லும்!" என்று மொழிந்து மறைந்தது. இதை கேட்டது முதல்கொண்டு கம்ஸன் பித்துபிடித்ததனுக பல மொழிகளால் திட்டியும் நடுவில் ஒவ்வொரு தடவை பகவத் நாமாவை கூப்பிட்டு

திட்டுவதால் கடைசியில் நன்மையும் கிடைக்கும் என்பதை காண் பிக்க கருணை வள்ளல் தோன்றியிருக்கிறது.

ஆகவே மூடம் எப்பவுமே நல்லதை செய்யாது. அருளை கெடுக்கவேபார்க்கும் ஆதலால் கம்ஸன் பூதனை யென்ற ராக்ஷ ஸியை நல்ல யுவதியைபோல நந்தகோபலன் அரண்மனைக்கு அனுப்பினான். பூதனையும் கோபிகைகளைபோல தானும் ஒரு கோபி பெண்ணாகநுழைந்து பற்பலமாதிரி அருள்வடிவான ஸ்ரீ கிருஷ்ண குழந்தயை சீராட்டினாள். கைய்யிலெடுத்த குழந்தையை பார்த்தும் திருமுக மண்ட லத்திலிருந்து நீர் துளிகள் கண்களி லிருந்து நீர் நியம்பி மூக்கின் அண்டையூடெ வந்ததை பார்த்தாள் பூதனை "ஹா! ஹா! என்ன முகமண்டலம்! நீல தாமரையின் நடுவிலெ மரகத ஒளிவீசியதிலெ நீரோடும் தன்மயை உதய காலத் தில் கண்டால் ஒரே தேஜோமய மாயிருக்குமோ அதற்கு ஒப்பா கியதே!" இந்த குழந்தையை கொல்வதற்காக வந்த நான் என் னுயிரையே இவருடைய முகமண்டல ஜோதியில் கலந்துவிடுவேன் போலிருக்கிறதே! எதற்கும் உண்ட விட்டிற்கு இரண்டகம்

செய்யாமல் கம்ஸனுடைய சோற்றை தின்று வளர்ந்த நான், அவன் சொற்படி கேட்டு பல அக்ரமங்களை செய்தேனுயினும் இந்த குழந்தையினுடைய தேஜஸ்ஸானது என்னை பரிசுத்த மாக்கட்டும் என்று எண்ணியவளாய் விஷம் தேய்த்த ஸ்தன் யத்தை கொடுக்க மார்போடணைத்து கொண்டாள். அருள் வடி வான திரு குழந்தையும் உயிரையே பிடித்திழுத்து கீழே தள்ளி மெத்தையாக எண்ணி விளையாடிகொண்டு இருந்தது. ராக்ஷஸி மேல் குழந்தை விளையாடுகிறதே! என்று பயந்து நந்தகோபர் குழந்தையை எடுத்து ராக்ஷஸியை அப்புறப்படுத்தி திருஷ்டி பரிஹாரம் செய்தார்கள்.

பூதனை என்பவள் ராக்ஷஸியாயிருந்தும் பாகவானுடைய ஸ்பர்சம் ஏற்பட்டதும் ஞானம் பிறந்தவாளாக துதித்தாள். மறுபடியும் தன்னுடைய இயற்கையை மறவாமல் திரு குழந்தயை அணைத்துகொண்டு தாயைபோல அருளை பெற்ருள். இந்த பாக்யமடைந்த பூதனை ஜிவன் முக்தி அடைந்தாளென்றே சொல்லலாம்.

ஜீவனானது பரமாத்மாவை காணும்போது ஜீவனுடைய ஸ்வரூபமே இல்லாது மறைந்து விடுகிறது என்பதை நன்றாக இதனால் தெரிந்துக்கொள்ளலாம்.

(சகடனை மாய்த்தல் இவ்வுலகமாகிய மாயையென்னும் சக்ரம் சுழன்று சுழன்று மறுபடியும் திரும்பி திரும்பி வருவதை யோக வலிமையால் அடக்கினால் மட்டுமே இருவினை பயன்களை ஜயிக்கலாமென்பது.)

கோகுலத்திலெ நந்தகோபர் அரண்மனையில் அருள் வடிவமானது பாது காத்து வருகிறது. பாது காப்பு அதிகமாக இருக்குமிடத்திலெதான் பயங்கர செயல்கள் நடக்க தூண்டுகோலிருக்கும். மூடத்தின் ஏவலாலே சகடன் என்ற அஸுரன் ஒரு வண்டி சக்ரம்போல உருவமெடுத்து உருண்டு வந்து குழந்தயை மாய்க்க எண்ணியவனாக அதிக வேகமாக நந்தகோபர் அரண்மனை நோக்கிவந்தான். எதேச்சையாக திரு குழந்தையும் தொட்டிலிலிருந்து கீழே தவழ்ந்து யாருமறியாமல் வாயர்படி

கிட்டே வந்தது. சகடனும் இதுதான் நமக்கு ஸமயமென்று எண்ணி பாய்ந்து உருண்டு குழந்தையிடம் வந்ததும், தன் தேஜஸு ஆகிய ஒரு சக்தி கிளம்பி சக்ரத்தை பிடித்து சுற்றி சுற்றி விளையாடுவதைபோல காட்டி தூர தள்ளி விட்டதும், சகட உருவம் மாறி ராக்ஷதஜீக உருபட்டு உயர் துறந்தது. பிற்பாடு ஒன்றுமறியாத அருள் குழந்தையின் அழுகுரலை கேட்டு, ஓடிவந்த நந்தகோபர் அடுத்து விபத்து நேரிட்டும்கூட நம் குழந்தையை காப்பாற்றிய அருளை நினைத்து பகவத்சிந்தை யிலாழ்ந் தார். ஏ, நாராயணு! "உன்னுடைய குழந்தை தானிது என்னுடையது அல்ல! நீரே தான் காப்பாற்ற வேண்டும். சிறுது தப்பியிருந்தால் இதன்கதி என்னவாகும்" என்று சாந்தி யடைந்த நந்தகோபர், ஈச்வர லீலையை கண்டு ஆநந்தித்தவராய். அருள் வடிவான திரு குழந்தையிடம் பிரேமையில் ஆழ்ந்தார். யசோதையும் மற்றுமுள்ள கோபிகைகளும் பார்த்து ஆச்சர்ய மடைந்தவர்களாய் நின்று பகவத் லீலையை பாடி அதிசயித்தார் கள்,

ஈச்வரனை தாயாக பாவிப்பதும் தோழனாக பாவிப்பதும், தந்தையாக பாவிப்பதும், மகனாக பாவிப்பதும் ஒவ்வொரு உபாஸனைகளாகும் நந்தகோபரும் மற்றுமுள்ள கோபிகைகளும் ஈச்வரனை குழந்தையாக பாவித்து பக்தி யென்னும் பிரேமை யினாலே தன்னை ஜயித்தார்கள் என்று நன்கு விளங்குகிறது.

(நள குபேரர்களுடைய சாபம் தவிர்த்தல்)

காலையிலெ பகவத் லீலா விபூதிகளை பாடிக்கொண்டு அமுது கடைந்திருக்கும்போது திரு குழந்தையானது தவழ்ந்து வந்து சட்டி பானையை உடைத்து நவநீதம் உண்டு நிற்பதை கண்ட யசோதை மத்தின் கயிற்றால் கட்டிய உரலிலே நிற்கும்படி செய்து தன் வேலையை கவனித்தாள். அப்படியிருக்க அருகிலிருந்த தோட்டத்திற்கு உரலையும் உருட்டி கொண்டு நெடுநாளாக விருந்த இரண்டு மருத மரத்திற்கிடையே சென்று, உரலை இழுக்க முடியாமலிருந்ததை கண்டு, ஏதோ ஒரு அருள் வடிவம் பின்னுடே குழந்தைக்கு உதவிசெய்ததுபோல தோன்றியதும் இன்னொரு தடவை இழுத்தும் மரமிரண்டும் கீழேவிழுந்து தேவனுரு

வம் கொண்டவர்களாய் நளகுபேரர்கள் துதிக்கிருர்கள். "ஹே! ஈச்வர ஸ்வரூபா! குழந்தை உருவமாக தாங்க முடியாத உரலை இழுத்துக்கொண்டு வந்து பக்தர்களுடைய வாக்யத்தை ரக்ஷிப்பதின் பொருட்டும் எங்களை ஈடேற்றும் பொருட்டும் இப்படி வந்ததை நினைக்கும்போது தாய்க்குமேலான அன்பை எங்களிடம் காட்டி அருளிய அருள் லீலையை என்னவென்று சொல்வது?" என்று துதித்து திரு குழந்தைக்கு வந்தன பூர்வமாக முத்தமிட்டு, தன்னிருப்பிடம் சேர்ந்தார்கள். இதை கண்டு கொண்டிருந்த கோபாலர்கள் நந்தகோபரிடம் சொல்லி நின்ருர்கள். உடனே ஓடிசென்று உரலை அவிழ்த்துவிட்டு எடுத்து மடிமேல் வைத்து குழந்தை உயிர்தப்பிவந்தது அருள் உருவமே வந்து காப்பாற்றித்து என்பதை உணர்ந்து ஆநந்தமடைந்தவராய் சாந்தி அடைந்து பிரேமையிலாழ்ந்தவும் யசோதையும் ஓடிவந்து தான்செய்த அபசாரத்தை சொல்லி வருத்தமுற்று சோகநீர் பெருக்கி ஸ்ரீமன் நாராயணரை துதிபாடி சாந்தி அடைந்தாள்.

"மனதை பரமாத்மாவிடம் செல்ல வொட்டாது தடுக்க கூடிய விருப்பு வெறுப்பான இரண்டு மரங்களைபோல வளர்ந்து கொண்டே வருவதை பக்தியினாலும் அடிக்கடி அருள் வடிவினுடைய ரஹஸ்ய லீலைகளை கண்டு அதிசயமாக மனமுருகி நிற்பதுமான சாந்தியும், ஈச்வர சக்தியே விளையாடிகொண்டு இருப்பதாக உள்ளத்திலுணர்ந்த பிரேமையாலும் பகவத் உபாஸனை செய்யவேண்டுமென்பதை விளங்குகிறது."

ஓம் தத் ஸத்.

சுழல் காற்று என்னும் அஸுரனை மாய்த்தல்

சிறு குழந்தையாகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இரண்டு வயதானதும் வாயர்படி இறங்கி பூமியில் தவழ்ந்ததை கண்ட சுழல் என்னும் அசுரன் ஒரு பெருங்காற்று அடித்து மணல்வாரி குழந்தை மேலிட்டு மறைத்தவனாக தூக்கி சென்றான். உடனே திரு குழந்தையும் ஒரு யோசனையும் தோன்றாது இருக்கும்போது, அருள்

தேஜஸு காற்றிற்கு எடுக்க முடியாத அஸுரனும் கீழே குழந்தையை இறக்கி விட்டு தன்னுயிரை போக்கி கொண்டான்.

"காற்றால் உலர்த்தவோ எடுக்கவோ அல்லது வெறொன்றை செய்யவோ முடியாத ஒன்று அருள் வடிவம் என்பதை விளக்கி விட்டது அந்த குழந்தை.''

கோபியரின் உள்ளத்தை கொள்ளை கொள்ளுதல்

ஸ்ரீகுருஷ்ணனுக்கு மூன்று வயதானதும் அக்கம் பக்கமுள்ள வீட்டுகளிலும் புகுந்து நவநீதம் எடுத்துக்கொண்டு சட்டி பானைகளை உடைப்பது வழக்கமாயிருந்தது. "அருள் வடிவானது தானிருந்த இடத்தில் மட்டும் அருளை காட்டினால் போதாது. நம்மை சுற்றிய அயலாரையும் அருளுக்கு பாத்திரர்களாக்க வேண்டுமென்ற எண்ணத்தை கொண்டதினாலே யாவும் தன்னுடையதாக எண்ணி ஸ்வதந்தரமாக சென்று எடுத்து புஜித்து விளையாடினார் என்பதை நாம் அறியவேண்டும்.

களவாடி தின்றதைபற்றி கவனிக்கவேண்டிய விஷயங்களுண்டு! "பகவத் லீலைகளை அறியாமல் தம் அருளை பறி கொடுத்து ஜீவனை மாயையில் உழலவிடாதபடி (திருடனை போல) மறைவாக விருந்துதான் அருள் வடிவம் நடத்துகிறது. நம் மிச்சைப்படி உழலாமல் பகவத் லீலைகளை சொல்லி பக்தியுடனிருக்க கருணை கூர்ந்தவராக களவாடி பக்திமார்க்கத்தை பிரேமையினாலே காட்டினார் என்பதை நாம் அறியவேண்டும்.

கோபியர் மனத்தில் உபாஸனை மூர்த்தியாக அமர்தல்!

எப்பொழுது அருள் தானாகவந்து தயை புரிகிறதோ அப்போது பக்திஉண்டாவதும் ஸஹஜம். ஸ்ரீகிருஷ்ணன் கோபியர் வீடுதோறும் சென்று நவநீதம் எடுத்ததினாலும் பகவத்ஸ்பர்சம் பட்டதாலுமே ஒருவித பக்தியானது கோபியர்களுக்கு தன்னை அறியாது வந்துவிட்டது. கோபிகைகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணனை மறந்து இருக்க முடியாமல் போயிற்று. எப்படியாவது இன்று அந்த திருடன் வந்தால் பிடித்துக்கொள்ள வேண்டும். விடக்

கூடாது. என்ன அழகு பார்த்தாயா? ஆமாம்! நானும்கூட அப்படித்தான் நினைக்கிறேன். இந்தப்படி பல கோபிகைகள் நினைத்தவராய் தம் வீட்டில் நவநீதம் திருட, வராவிடில் ஏதாகிலும் காரணத்மத சொல்லிக்கொண்டு நந்தகோபர் அரண்மனைக்கு வந்து கண்ணனை பார்த்து பார்த்து பசி தீர்ந்தவர்களாய் ஸ்தம்பித்து நிற்பார்கள். இந்தமாதிரி நிச்சல தன்மையாக தன்னை மறந்து பிரேமா பக்தியிலாழ்ந்து இருக்கவேண்டுமானால் ஸ்ரீ கிருஷ்ணனை உபாஸனா மூர்த்தியாக கொள்ளாவிடின் ஸாத்தியமாகுமா? இந்தவிதமாக கோபியரின் உள்ளத்திலே விசால தேஜஸ்ஸின் நடுவில் ஸ்ரீகிருஷ்ணனை உபாஸித்து வந்தார்கள். இவர்களுடைய பக்தியே பற்பல சித்திகள் உண்டாயிற்று என்பதை நாம் மறக்க முடியாது.

சாந்தி.

மண்ணைதின்ற வாயில் எல்லா உலகமும் காணல்

ஸ்ரீ கிருஷ்ணன் குழந்தை விளையாட்டாக மத்தை பிடித்து கழற்றிகொண்டு வெளிவந்து மண்ணை எடுத்து புஜித்தான். இதை கண்டுகொண்ட யசோதை மத்தை பிடுங்க போனதும் மண்ணை வாரி வாயிலிட்டு நிற்பதை கண்டதும் பிடுங்கி வாயிலுள்ள மண்ணை எடுக்க கருதியவளாய் வாயை திறக்க சொன்னாள். உடனே தாய் நடு நடுங்கி எல்லாவித உலகங்களும் வாயில் சுற்று வதை கண்டு மூர்ச்சித்தாள். திரு குழந்தையும் அம்மாவின் மார்பை தட்டி எழுப்பி நின்று அழ ஆரம்பித்ததும் குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டினுள் சென்று நந்தகோபரிடம் தான் கண்ட வைபவத்தை சொன்னாள். நந்தகோபரும் நம்முடைய தவமே ஒரு உருவமாக அருள் குழந்தையிது என்று போற்றினார் கள்.

அருள் நிறைந்து உருவமெடுத்தவர்கள் செய்வது ஆச்சர் யத்தை விளைவித்து சாந்தியை கொடுக்கும். எல்லாவித உலகங்

களும் அருளாலேயே நடந்து வருகிறது என்பதை அருளாலேயே நாம் அறியவேண்டும்.

சாந்தி.

விருந்தாவனமேகி பசுக்களை இரக்ஷித்தல்

முக்கியமாக மனிதர்களுக்கு வேண்டிய புஷ்டியை கொடுப்பதற்கு பசுமாட்டின் பால் உதவியாகுமென்பதை அறிந்தவராய் பசுமாடுகளை புஷ்டி செய்து வந்தார். புற்கள் நிறைந்த இடமான ஊரைவிட்டு சிறிது தூரத்திலே விருந்தாவன மென்று பேர் கொண்டதான ஒரு அழகிய இடத்திற்கு மாடுகளை கொண்டுபோய் பசியாறி வரலாமென்று எண்ணியவராக கோபாலரும் ஸ்ரீகிருஷ்ணனுடன் சேர்ந்து பசுக்களை ஸம்ரக்ஷணை புரிந்து வந்தார். மாடுகளுடன் தானுமொரு மாடாக கூட்டத்தில் கலந்து மேய்ந்துக் கொண்டு இருந்த ஒரு அஸுரனை பிடித்து இழுத்து கயிறுகளால் கட்டி அடித்து கொன்றார்.

" தன்னுடைய பசுத்தனத்தை நீக்கி பசுக்களை ரக்ஷிக்க வேண்டுமென்பது "

சாந்தி.

பகாஸுரன் வதை !

இன்னொருநாள் விருந்தா வனத்திலே குழல் ஊதிக்கொண்டு மயில் இறக்கையை தலையில் வைத்த ஸ்ரீகிருஷ்ணனும் கூடவேயிருந்த கோப பிள்ளைகளும் மாடுகளை மேயவிட்டு தாங்கள் கேளி விளையாட்டாக இருக்கும்போது பகனென்னும் அஸுரன் கொக்கு உருவமாக கிட்ட வந்து அருள்வடிவான ஸ்ரீ கிருஷ்ணனை விழுங்கிற்று. உடனே அருள் அக்நியாக தோன்றியதில் நெஞ்சு தளர்ந்த அஸுரன் கீழே இறக்கினன். உடனே ஸ்ரீ கிருஷ்ணன் தன் இரண்டு திருகைகளால் கொக்கின் பாகத்தை மூக்கைப் பிடித்து இரண்டாக சிந்தி போட்டான். இதை கண்ட கோபால பிள்ளைகள் ஆச்சர்யமடைந்து கோகுலத்தில் முழுதும் நடந்த ஸமாசா

ரத்தை சொல்லி ஸ்ரீ கிருஷ்ணனுடைய அருள் ப்ரஸாதத்தை போற்றினார்கள்.

"ஸாதாரணயாக மனிதர்களுக்கு கிடைக்கும் பதார்த்தங்களையெல்லாம் சாப்பிடசெய்யும் ஒருவித பகன் தம்முள்ளே இருந்து வருவதுண்டு! அதை தன் மனோதிடமென்னும் அடக்கத்தினாலே தூரே தள்ளி வழக்கத்திற்கு மாறாக செய்யக்கூடா தென்பதை உபதேசிக்கிறார்.

காட்டுதீயை உண்டு கோபால பிளளைகளையும் பசுக்களையும் காத்தல்

பகனை கொன்ற ஸமாசாரத்தை கோகுலத்தில் மறையடிவர்களாக விருந்த கோப பிள்ளைகளுடைய ஸாமர்த்தியத்தை புகழ்ந்த அவரவர்களின் தாய் தந்தையர்கள் ஆசி கூறினார்கள். அதற்கு கோபாலர்கள் "அம்மா, எங்களால் ஒன்றுமில்லை! அந்த கண்ணனுடைய வேலையிருக்கே! ஆச்சர்யமாயிருக்கு!" என்றார்கள்.

சரியாகட்டுமென்று ஸ்ரீகிருஷ்ணன் குழல் ஊதும் சப்தம் கேட்டதும் எல்லோரும் கூடி மாடுகளை ஓட்டிக்கொண்டு விருந்தாவனம் சென்றார்கள். போகும்போது வனங்களிலே காட்டு தீயைபோல எரியவிட்டு கொண்டு வரும் ஒரு அஸுரனுடைய செய்கையை கண்டதும், பசுக்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒருவித துன்பமும் வர கூடாது என்று எண்ணியவராக காட்டுத்தீ சுடர்விட்டுக்கொண்டு வரும் எதிரில் அடைந்து இருகரங்களாலும் கூட்டி அருளை நினைத்தவராக புஜித்து தணித்துவிட்டார், விருந்தாவனமும் குளிர்ந்தது.

நெருப்பையும்கூட எரிக்கும் சக்தி அருளுக்கு உண்டு என்பதை விளக்கினார்.

சாந்தி.

காளீய நர்த்தனம் !

நக்ஷத்திரங்கள் சுற்றிய சந்திரனைபோல ஆநந்த மடைந்து விளையாடும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய, விளையாட்டாக காட்டுத் தீயை சாப்பிட்ட ஸமாசாரத்தை சொல்லி இனிமேல் தீங்கு வராதிருக் கட்டுமென்று சுற்றிபோடல் முதலிய திருஷ்டி பரிஹாரம் செய் தார்கள். ஏற்கனவே கோபிகைகளுக்கு பிரேமை உண்டாயிற்று. அதிலும் சில அதிசய ஸமாசாரங்களையும் கேட்டால் பிரேமை யானது அப்படியே ஸ்ரீ கிருஷ்ணனிடம் உடல் பொருள் ஆவி மூன் றையும் அற்பணம் செய்வார்கள் என்பதை கேழ்கவும் வேண்டுமா? விருந்தாவனத்திற்கு அடுத்தாகயிருக்கும் ஒரு தடாகமானது இருந் தது. அது முழுதும் விஷம் மூடியிருந்ததால் அங்கே யாராலும் போக முடியாது. பசுமாடுகள் எப்படி தப்பிதவறி அங்கே போய் தடாக ஜலத்தை குடித்து மூர்ச்சித்தது இதை கண்ணுற்ற ஸ்ரீகிருஷ்ணன் காரணத்தை உணர்ந்து தடாகத்தில் குதித்து காளி யனைபிடித்து நாக்கை இழுத்து கையில்பிடித்து தலையிலும் மார் பிலுமாக சமிட்டிக்கொண்டு நர்த்தனமாடி வெளி கிளம்பினர்.

மயங்கி கிடந்த மாடுகளும் கோபால பிள்ளைகளும் எழுந்து தர்சித்தார்கள். கோகுலத்தவர்களும் தர்சிக்க வேண்டுமெனக் கருதியதால் இங்கே தடாகத்தில் குதித்து காளியனிடம் சண்டைபோடும் தருணத்திலே கோகுலம் முழுதும் இருண்டதாயிற்று. அதைகண்டு மனங்கலங்கியவர்களாய் விருந்தாவனம் நோக்கி புறப்பட்டு வந்து எங்கும் காணுமையால் சிறிது தள்ளியிருக்கும் இத்தடாகத்திற்கு அருகில் வந்ததும் ஸ்ரீகிருஷ்ணன் காளியன்மேல் நர்த்தனம்செய்து கொண்டு இருப்பதை கண்டாநந்தித்தார்கள். நந்தகோபர் அருளைபற்றிய சில துதிகளைபாடி கண்ணனை ரக்ஷிக்க வேண்டுமென்றுர், யசோதை பிரேமையினுலே வாரியணைக்க போனுள். கோபிகைகள் கண்ணனை ரக்ஷிக்கவேண்டும் பிரபோ! கண்ணனில்லாவிட்டால் இந்த பாம்பிற்கே நாங்கள் உயிரை விடுவோம்! ரக்ஷ. ரக்ஷ, என்று கதறியவர்களாக இருந்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் நர்த்தனம் செய்து யாவரையும் ஆநந்திக்கசெய்து காளியனை கைலாஸ சிகரத்தினிடம் போக சொல்லி அந்த தடாகத்தை யாவரும் சாப்பிடும் படியாக செய்தார். "பஞ்சேந்திரிய

மாகிய ஸர்பமானது தன்னை கெடுக்கவே பார்த்துக்கொண்டு இருக்கும், அவற்றை மனமென்னும் தடாகத்துள் அமழ்த்தி பரிசுத்த தன்மையை காட்டி விட்டால், மயங்கவோ, இருளாலேற் படும் துன்பத்திற்கோ ஒருவித பயமும் உண்டாகாது. ஆத்மா வானது பரிசுத்த தன்மையை அடைந்து நிற்கும்.

தடாகத்தைவிட்டு வெளிவந்த கண்ணனை வாரி அணைத்த வர்களாய் கோகுலம் சேர்ந்து பூர்ணசந்திர முகத்திலிருந்து நிலா கிளம்புவதை புஜித்து ஆநந்தமடைந்தார்கள்.

சாந்தி.

பாம்பாஸுரன் வதை !

இன்னொருநாள் விருந்தாவனத்திற்கு போகையில் எதேச்சை யாக இரண்டு மலைகளுக்கிடையில் ஒரு துவாரம் போல காட்டிய வாயை பிளந்துகொண்டு படுத்திருந்தான் பாம்பாஸுரன். இதை

ஒன்றுமறியாத கோபபிள்ளைகளும் பசுக்களும் கன்றுகளும் குஹை யென நினைத்து உள்ளே நுழைந்து விட்டது. அவ்வஸுரனே ஸ்ரீ கிருஷ்ணனும் இதில் நுழைந்தால் மட்டுமே வாயை மூடுவேன் என்று பிளந்த வாயாகவே இருந்தான். கடைசியாக ஸ்ரீகிருஷ்ண னும் உள்ளே நுழைந்தான். பாம்பு வாயை மூடிற்று. ஸ்ரீகிருஷ் ணன் அருளை தியானித்து தேஜஸை பெருக்கி பெரு உடம்பாகவும் பாம்பின் வயிறுவெடித்து உயிர் துறந்தது. மயங்கி கிடந்த பிள்ளைகளையும் பசுக்களையும் எடுத்து மூர்ச்சை தெளிய செய்து கோகுலம் வந்து சேர்ந்தால் இருவினை துவாரமென்னும் மடமை மனிதனுக ஜனித்த போதே கூடவே யிருந்துவருகிறது. அதை அருள் தியானத்தினுலே பரிசுத்த ஹ்ருதயமுடையவனுக யிருந்து தத்பொருளை நோக்கி செல்ல வேண்டுமெண்பது விளங்குகிறது.''

சாந்தி.

கோபிகாவஸ்திரா பஹரணம்!

கோபிகைகள் கோகுலத்தில் நடக்கும் ஈச்வர லீலைகளை பாடிக்கொண்டு நீராட தம்தம் ஆடைகளை கழற்றிவைத்து யமுனா நதியிலிறங்கி விளையாடிக்கொண்டு இருந்தார்கள். மறுபடியும் பிரேமா பக்தியை அதிகரிக்க செய்ய வேண்டுமென்று எண்ணத்தை கொண்ட கண்ணன் அவ்விடம் எங்கிருந்தோ ஓடிவந்து ஆடைகளையெல்லாம் எடுத்து மரத்தில் கட்டிவிட்டு. கொம்பின் மறைவிலே வீணுகானம் செய்தான். இதைக்கண்ட கோபிகைகள் தம் ஆடைகளை யெல்லாம் கண்ணன் மரத்தில் தொங்கவிட்டி வேடிக்கை பார்க்கிறுன்போலும்! என்றவர்களாக தண்ணியி லிருந்துக்கொண்டு ஆடைகளை அவிழ்த்து எங்கள்மேல் போடு! என்கிறுர்கள், ஓ கண்ணு! நீ சோதனை செய்யாதே நாங்கள் உன்னையே உள்ளத்தில் நினைத்தவர்களாக இருக்கிறேம். ஈச்வரனுடைய அருள் லீலையை உன்னிடம் பார்த்தோம்! உன்னருள் எங்களுக்கு உண்டானுல், எங்களை அவமானம் செய்யாது ஆடைகளை போட்டுவிடு! என்றதை கேட்ட கண்ணனும் ஓ கோபிகை

களே ! நீங்கள் என்னிடம் பூர்ண பக்தியை செலுத்திருப்பீர்களா ஞல் தண்ணியைவிட்டு கரையில் வந்து என் கிட்டே நின்றவர்க ளாக ஸேவித்து ஆடைகளை பெற்றுகொள்ளுங்கள், என்ருன். உடனே அவர்களும் வேறு கதியில்லாது மானுபிமானங்களை விட்டு குழந்தையிடம் தாய்மார்கள் செல்வதுபோல கிட்டே போய் ஆடைகளை பெற்றுகொண்டு அணிந்தவர்களாக நின்ருக கள். கண்ணனும் ஓ கோபிகைகளளே ! இந்தப்படி என்னிடம் வந்து ஆடைகளை பெற்றதுபோலவே இச்சரீசத்திற்கு மானுபி மானங்களுண்டு ! அவற்றை நீக்கிஞல் மட்டுமே மோக்ஷவஸ்திரம் அருள்வடிவமாக வருவதை தரித்துகொண்டு ஆநந்திக்கலாம் என்பதை மறவாதிர்கள் ! நீங்கள் இதுவரையில் என்னை உபா ஸித்தமையால் நானே நேரில் வந்து அருளை காட்டினேன் என் ருன். இதைகேட்ட கோபிகைளும் தன் சரிர துன்பத்திற்கு இடம் கொடுக்காமல் சைதன்ய ஸ்வரூபத்தையே தம்தம் ஆத்மா வுக்கு ஆடை, என்பதை உணர்ந்தார்கள்.

சாந்தி.

ஆத்மபிக்ஷை யளித்தல்!

விருந்தாவனம் சென்ற ஸ்ரீ கிருஷ்ணனும் கோபபிள்ளைகளும் மாடுகளையெல்லாம் புற்கள் நிறைந்த இடத்திற்கு ஓட்டிவிட்டு கோகுலத்திலிருந்து கொண்டுவந்த சித்ரான்னம் கட்டி சாதம் முதலியவைகளை புஜிக்க யமுனா நதியிலே பரந்த பாறைமீது உக்கார்ந்து புஜிக்கலானார்கள். கோப பிள்ளைகளெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸாமர்த்தியத்தை கண்டவர்களாதலால் பிரேமையை மேலிட்டு "கண்ணா உன் கையாலே எங்களுக்கெல்லாம் அன்னத்தை கொடு! என்றார்கள். சரி ஆகட்டும் என்று கோப பிள்ளைகளுக்கு எடுத்து எடுத்து கொடுக்க புஜித்துக்கொண்டே இருந்தார்கள். கடைசியாக போதுமென்று ஸ்ரீ கிருஷ்ணனுடைய சிரமத்தை உத்தேசித்து ஸ்ரீகிருஷ்ணனையும் புஜிக்க செய்தார்கள்.

இதை வான்மீது அளாவிய தேவர்கள் பார்த்தவண்ணமாக விருந்துகொண்டு ஒவ்வொருவர் சொல்லி கொள்ளுகிறார்கள். "நாம் ஸ்வர்கத்தை அடைய முயற்சித்தோமே ஒழிய பகவத்

லீலா விபூதிகண்டு ஆநந்தித்தோமில்லை! பார்த்தீர்களா இந்த கோப பிள்ளைகளுடைய பாக்யத்தைகூட நாம் பெற்றேமில்லை! எல்லாரும் பகவானுக்கு பிக்ஷை அளிப்பதுபோல நினைத்து, அடியார்களை ஆசார உபசாரமாக பிக்ஷை யளிப்பது வழக்கம்! இவர்களோ பகவானிடமிருந்து பிக்ஷை ஏற்றுக்கொண்டு ஆநந்திக்கிறார்கள்! ஸுகத்தையே அனுபவித்த நாம் ஸுகத்தின் பெருமை விளங்குகிறதில்லை. கூட கஷ்டமும் இருந்தால் மட்டுமே ஸுகத்தின் பெருமை தெரியும்! இந்த கோபபிள்ளைகளோ மிகுந்த ஆபத்திற்கு உள்ளாகியும் பகவத் கிருபையினாலே தடுத்துவிட்டு, நம்மைபோல சுகத்திலும் இச்சையில்லாது ஈச்வர் லீலா அம்ருதமென்னும் அனுபூதியை புஜித்து சுகமும் துக்கமும் இல்லாது பரமாத்மாவிற்கு தோழர்களாக பிரசாசிக்கிறார்கள்! இவர்களுடைய உச்சிஷ்டத்தையாவது புஜித்து நாமும் கோபாலர்களை போல சோபிப்போமாக!" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு கீழே கிடந்த அன்ன பொருக்குகளை ஒன்று விடாது எடுத்து புஜிக்க உனக்கு! எனக்கு என்று சண்டைபோட்டார்கள் என்பதை நாம் மறக்கமுடியாது.

உபாஸனையின் மூலம் பகவானிடமிருந்தே ஆத்மாநந்த மென்னும் பிக்ஷயை வாங்கிக்கொண்டு (ஸ்வர்க்கபோகமும் பயனை விரும்புவதான கர்மமுமான) பசியை தணித்து பரமாத்மாவாக சோபிக்கலாம் என்பது!

ஓம் தத்ஸத்

சாந்தி.

ஸ்ரீ கோவர்த்தனகிரியை குடை பிடித்தல்

சித்திரான்னங்களை புஜித்த சமாசாரங்களை தம் தம் தாய் மார்களிடம் சொல்லி அதிசயித்த கோபாலர்களும் ஸ்ரீ கிருஷ்ண னும்கூட கோலி விளையாட்டாக இருந்த ஸமயம், நந்தகோபர் இந்திரனை உத்தேசித்து பொங்கல் இடுவதற்காக சாமான்களை சேகரித்தார். இதை கண்ணுற்ற கிருஷ்ணன் நந்தகோபரிடம் வந்து "இந்த சாமான்கள் எல்லாம் எதற்காக சேகரிக்கிறீர்கள்? அப்பா! என்று கேட்ட கண்ணனுக்கு தாம் செய்யவேண்டிய

பொங்கல் பண்டிகை என்பதை சொல்லி விளக்கினர். இந்திர னுக்காகவா இவ்வளவு! வேண்டாம் அப்பா! இந்த பொங்கலை கோவர்த்தன கிரிக்காக செய்வோம்! என்றதும், மகன் கொள் கைக்கு இரங்கிய நந்தகோபரும் கோவர்த்தன கிரிக்காக பொங்கல் இட்டார்கள். இந்திரனுக்கு கோபம்வந் துவிட்டது! வானம் இருண்டது சரமாரியாக வான் சொரிய ஆரம்பித்து விட்டது. கோகுலம் முழுதுமே பயந்து கோபிகைகளும் கோபலர்களும் நந்த கோபர் யசோதை முதலிய ஊர் ஜனங்களும் கன்றுமாடுகளும் மாரியினல் வருத்தமுற்று அங்குமிங்கும் ஓடி ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்ததும், அருளை தியானித்தவராக கோவர்த்தனகிரியை கையி லேந்தி நின்று யாவரும் இங்கே வாருங்கள் துன்பமே இராது! என்று கூவி யாவரையும் கோவர்த்தன கிரியின் அடியில் நிர்க்க செய்தார். இவ்விடத்திலே சில சந்தேகங்கள் வரலாம்! மலையை தூக்குவதாவது! அதனடியிலிருந்து பசியும் தாகமும் இல்லாது ஏழுநாள் இருப்பது என்பதைமட்டும் கவனிக்கதக்கது! ஸ்ரீ கிருஷ்ண ஹ்ருதயமென்னும் விசால அருள் ஜோதியிலே தம் தம்

ஆத்மாவை சேர்பித்துக்கொண்டு தன்னை மறந்த ஸமாதியிலே லயித்து இருந்தார்கள்! என்றே சொல்லாம்,

இந்திரனுடைய மாரி வீணுக போவதைகண்டு நிர்த்திவீட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பெருமையை உணராமல் செய்த அபசாரத்தை தணிக்க நினைத்த இந்திரன் கண்ணனும் மற்றுமுள்ள கோபாலர்களும் கோவர்த்தன கிரியின் அடியில் தன்னை மறந்து தியான நிலையில் இருப்பதை கண்டு ஒவ்வொருவருச்காக வந்தனம் கூறிக்கொண்டே வந்து கடைசியாக ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்த கமலங்களிலே குண்டலங்கள் தரித்த சிரஸை உரைத்தான். ஸ்ரீ கிருஷ்ணனும் அபயம் தரவேண்டுமென்று பாதத்தை பிடித்த இந்திரனுக்கு ஆசி கூறி அனுப்பினர்.

மாரி நின்று நிஷ்டை கலைந்த கோபாலர்களும் நந்தகோபர் யசோதை மூதலிய ஊர் ஜனங்களும் கன்றுகளும், மாடுகளும், ஸ்ரீ கிருஷ்ணனை துதித்துக்கொண்டே தம் தம் வீடு அடைந்தார்கள்.

உபாஸனை செய்துக்கொண்டு வந்த மூர்த்தியே தானாக சோபிக்க செய்து அருளை காட்டும்போது தன்னை மறந்த'ஸமாதி நிலை கிட்டுகிறது. வெளிவந்ததும் தன்னை அண்டியவர்களையும் அருளுக்கு பாத்யதையா செய்வதும் உலகத்தோருக்கு நண்மையைச் செய்வதானது இந்திரனுக்கு செய்வதைவிட மேலானது என்பதை விளக்குகிறது.

சாந்தி.

ப்ரம்மா துதித்தல் !

இன்னொரு நாள் விருந்தாவனத்திலே மாடுகளையும் கன்றுகளையும் ஓட்டிவிட்டு தான் தனிமையாக உட்கார்ந்து கொண்டு குழல் ஊதிய (கிருஷ்ணனுடைய) ஓசையை கேட்டு எல்லாம் தன்னைமறந்து நின்றது. ஸ்ரீ கிருஷ்ணனும் ஸமாதியிலாழ்ந்தார். அந்த சமயம் பார்த்து வந்த பிரம்மாவானவர், மாடுகளையும் கன்றுகளையும் கோபாலர்களையும் ஒரு மலை குஹையில் ஒளித்தார். மாலை ஐந்துமணியாகியதும் ஸ்ரீ கிருஷ்ணன் கண்களை திறந்து

பார்க்கையிலே மாடுகளும் கன்றுகளும் கோபாலர்களையும் காணாததைக்கண்டு யோசித்து தெளிந்து அருளை தியானித்தவராக மாடுகளுடைய உருவமும் கன்றுகளுடைய உருவமும் கோபாலர் களுடைய உருவமும் தானுமாக அதாதுக்கு தகுந்த அவயவங் களுடைய ஸ்வரூபத்தை தாங்கியவராக கோகுலத்தில் வந்து சேர்ந்து அவரவருடைய வீட்டுக்குள் புகுந்து அதாதினுடைய சேஷ்டைகளையும் புரிந்து வந்தது. இப்படி சிலநாட்கள் கழிய கண்ணனுடைய நிலையை அறிய கருதி பிரம்மா வானத்திலிருந்து விருந்தாவனத்தில் பார்த்ததும், கன்று மாடுகள் கோபாலர்கள் எல்லாம் க்ருஷ்ண ஸ்வரூபமாக கண்டு நடுங்கியவராக கண்ண னுடைய பாத கமலங்களில் விழ்ந்து மன்னிப்பு கேழ்கிறார்.

கோக்களை ரக்ஷிப்பதே மேலான தபம் என்று உறுதி கொண்டு இந்திரனை ஜயித்த கோவிந்தா! உம்முடைய அருளை என்னவென்று சொல்வேன்? தேவர்களை மோஹிக்க செய்து கொண்டு தம் திரு கரங்களால் கோபால பிள்ளைக்கு அமுது கொடுப்பதிலிருந்து ஒரு பொருக்குவிழாதா? என்று காத்திருக்க

செய்த ஜனார்த்தனா! இப்போது என்னையும் ஜயித்து ஸர்வமும் தானாக சோபித்து எல்லாவித கோசங்களையும் தரித்தவராக இருந்த ஸ்ரீ கேசவா! உமக்கு நமஸ்காரங்கள் மட்டும் செய்தால் போதாது. இந்த விருந்தாவனத்திலே உங்களுடன் வரும் கனறு மாடுகளும் கோபாலர்களுடன் கன்று மாடுகளும் கோபாலர்களும் மெதித்துபோகும்படியான எரு கல்லாகவாவது என்னை ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். என்ற சாந்தியுடன் உரைத்த ப்ரம்மாவுடைய வாக்கியத்தை கேட்ட ஆபத்பாந்தவன் சரணாகத வத்ஸலன் சொல்கிறார்.

ஓ ப்ரம்மாவே! நீர் இந்தப்படி ஒளிக்காவிட்டால் அருள் வடிவம் இப்படி ஒன்று இருக்கும் என்பதை அறிய முடியுமா? ஆகவே நீர் செய்ததும் நல்லதே! உம்முடைய வேலையை பாரும்! என்று உரைத்து ஆசி கூறியதும் பழையபடி ஒளித்திருந்த மாடுகளும் கன்றுகளும் வந்ததும் தன் கோசங்களை யெல்லாம் தன்னிடத்திலடக்கிகொண்டு ஸ்ரீ கிருஷ்ணனாக இருந்தார்.

வீட்டிற்குவந்த கோபாலர்கள் தாம் பர்வத குஹையில் சிலது நாள் இருந்தோம்! அங்கே ஸ்ரீ கிருஷ்ணன் எங்களுக்கு அன்னத்தை கொண்டு தருவதுமாக விருந்தது. என்று சொல்லிய கோபாலர்களை நோக்கியவராக ஜனங்கள் ஸந்தேகித்தார்கள். ஓ கோபாலர்களே! நீங்கள் குஹைக்கு போயிருந்தால் இங்கேயும் தினமும் வந்தீர்களே! உங்களுக்காக போஜனத்தை நீங்கள் தானே கொண்டுபோனீர்கள்! இதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கவேண்டும்! எல்லாம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அருள் தேஜஸின் வேலை யென்று புகழ்ந்த கோபாலர்கள் கண்ணனுடைய பெருமையை பாடினார்கள்.

"அருள் இருக்கும்போது துன்பமாக வந்ததும் கூட நன்மையாகமாறிவிடும்! பத்து பேர்களைகூடி ஒன்றை நோக்கி இது அருள் வடிவம்! என்று உபாஸனைகள் செய்யும்போது இவர்களுடைய பக்தியின் எண்ணப்படி அருள் லீலை புரிந்து ஆநந்திக்க செய்கிறது!"

சாந்தி.

நாரதர் வந்து இன்னுமுள்ள பக்தர்களை காப்பாற்ற வேண்டும் என்கிறார்

ஸ்ரீமன் நாராயணருடைய அவதார லீலைகளை பாடிக் கொண்டு கோகுலம் அடைந்த நாரதர் ரஹஸ்யமாக ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்தன பூர்வமாக சில கோரிக்கைகளை வெளியிடுகிறார். ஓ கண்ணா! நீ பிறந்தது மதுரா! அங்கே உன்னை பெற்ற தந்தையர்கள் சிறைச் சாலையில் கஷ்டப்படுகிறார்கள். உன்னையே தியானித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள பக்தர்களுக்கு அருளை கொடுத்து ரக்ஷித்ததுபோல அங்கேயும் பக்தர்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள்! என்றதும், ஸ்ரீ கிருஷ்ணன் சரி யாகட்டும்! என்று ஆசிகூறினார். நாரதரும் அக்ரூரரை அனுப்பசொல்ல கருதியவராக கம்ஸனிடம் சென்றார்.

உபாஸனையின் முடிவானது நாம் பூஜித்த மூர்த்தியே தானாக காண்பது வரையில் தானிருக்கும். பிற்பாடு அந்த மூர்த்தியே தன்னுடைய ஸிம்ஹாஸனத்தை பக்தனுக்கு அளித்து தன்னை

போல சோபிக்க செய்துவிட்டு தான் மறைந்து விடுவது ஸஹஜம் !'' அப்போது சைதன்ய ஸ்வரூபமாக ஆத்மா சோபிக்கிறது.

சாந்தி.

கம்ஸ வதம்

கம்ஸனிடம் நாரதர் அபிப்ராயத்தைசொல்லி அக்ரூரரை அழைத்து தேரை அனுப்பி கண்ணனை கூட்டிவர சொல்லி உத்தரவளித்தான். இந்த கைங்கர்யத்தை ஏற்க பாக்யம் அடைந்த அக்ரூரர் ரதத்தை ஓட்டிக்கொண்டு கோகுலம் வந்தடைந்தார். கண்ணனை அழைத்துபோக வந்த சமாசாரத்தை கேட்டதும் மனம் கலங்கிய கோபிகைகளும் கோபாலரும் தாய் தந்தையர்களும் மயங்கினார்கள். உடனே யாவரையும் ஸ்ரீ கிருஷ்ணனே வந்து சாமாதானப்படுத்தி உங்கள் ஹ்ருதய கமலத்திலே நான் குடிகொண்டு இருப்பபேனாக! கவலைப்படாதீர்கள்! இன்னுமுள்ள

பக்தர்களையும் ரக்ஷிக்கவேண்டாமா ? நீங்களே யோசித்துப்பாருங்கள் !

நீங்கள் இதுவரை என்னை உபாஸித்தீர்கள் ! அதன் முடிவானது நானே நீங்களானீர்கள் ! அதன் லக்ஷணமானது சைதன்ய ஸ்வரூபங்களாகிய உங்களுக்கு இனி எப்பொழுதாவது ஒரு சமயங்களிலேமட்டும் மூர்த்தி தியானம் செய்தால் போதுமானது. இன்னுமுள்ள பக்தாளுக்கு மூர்த்தி தியானமே ஸித்திக்காதவர்களையும் ரக்ஷிக்கபோகிறேன், என்று திருவாய் மலர்ந்தருளி அக்ரூரருடன் ரதமேறி புறப்பட்டார்கள். நடுவிலே தாக சாந்திக்காக யமுனையிலிறங்கி அக்ரூரருக்கு விராட் ஸ்வரூபம் காண்பித்து போதனைபோல ரதத்திலும் இருந்த ஸ்ரீகிருஷ்ணனுடைய அருள் ஜோதியினுடைய லீலையை நினைத்துக்கொண்டே ரதமேறி மதுரையடைந்தார்கள். கம்ஸனுடைய அரண்மனை அடைந்ததும் முஷ்டிகாஸுரன் சாணூரன் முதலியஅ ரக்கர்களை இடித்துகொன்று, மதம்பிடித்த யானையையும் கொன்று, அதன் கொம்பை ஆயுதமாக கொண்டு முடமாக இருக்கும் கம்ஸனுடைய

மாடியை அடைந்து குதித்து ஒரே குத்தினுல் அவனை கொன்று தள்ளி ஜயபேரிகையுடன் சிறச்சாலையிலிருக்கும் வஸுதேவர் தேவகி முதலிய பக்தர்களையும் விடுவித்து தம் தம் கிரஹங்களில் அடைய செய்து தாமொன்றும் அறியாத பாலனை போலிருந்தார். பயமடைந்த ஆத்மா அருளை பெரும்போது பயம் நீங்கி விடுகிறது.

சாந்தி.

குருகுலவாஸம்

வஸுதேவர் தேவகி இல்லமடைந்த ஸ்ரீ கிருஷ்ணனும் பலபத்ரிரனும் கூடியிருக்கும்போது வசுதேவர் தேவகியும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலாவிபூதிகளை கேட்டபடியே பல அனுபவங்களை பாடினுர்கள். நமக்கு குழந்தை பருவத்தை சீராட்டி வளர்த்த பாக்யமுல்லாத நாம் இப்பொழுதாவது பார்க்கவும் அதன் லீலை

களை புகழும் கிடைத்ததே அதுவேபோதும் என்று மனசாந்தி அடைந்தவர்களாகி ஸ்ரீ கிருஷ்ணனையும் பலராமனையும் சாந்திப முனிவருடைய பாடசாலைக்கு வித்தைகளை கற்க அனுப்பினார்கள். குருகுலவாஸம் வித்தைகளை கற்று முடிந்ததும் என்ன குருதக்ஷிணை யாகவேண்டும்? என்னருமை குருவே! என்று கேட்ட கண்ணனிடம், சாந்திப முனிவர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அருள் ப்ரஸாதமிருந்தால் எதுவும் கிடைக்கலாம் என்று கருதியவராக, அப்பா கண்ணா! என் புத்திரன் நீரில் வீழ்ந்து இறந்துபோய் எட்டு வருஷங்களாகிறது அவனை கொண்டுவந்து கொடுத்தால் போதும்! அதுவே எனக்கு பூர்ண குருதக்ஷிணையாகும் என்று உரைத்த குருவின் கட்டளையை மேற்கொண்டு நதியில் மூழ்கி குருவின் மகனை தேடிக்கொண்டே போகையிலே சங்காசூரன் என்றவன் கையில் பிடித்திருந்ததை கண்டதும் அவனை கொன்று குரு மகனை வாங்கி சங்கத்வனி செய்து கொண்டு தண்ணீரிலிருந்து வெளிகிளம்பி, குருவினிடம் புத்திரனை கொடுத்து சாந்திப முனிவரை ஆநந்திக்கசெய்தார்.

தியானத்தினுல் தன்னை ஜயித்து பரிபூர்ண அருளை பெற்றவனுக்கு ஆகாத காரியமுண்டோ? நினைத்தால் சிந்தாமணியாக விருக்கும். விரும்புவதை கொடுப்பதிலோ காமதேனுவாக சுறக்கும். கற்பிற்ப்பதை யெல்லாம் உண்டாக்க கற்பகம் கூடவே இருக்கும். அஷ்டதிக்பாலர்களும் திருமூர்த்திகளும் தன்னிடமே விஸ்தார ஹ்ருதயத்திலே அமர்ந்த பரமாநந்த தர்சனமாகிய நிஷ்டையிலிந்தவர்கள் சொல்வதெல்லாம் வேதமாக விருக்கும்! செய்வதெல்லாம் மக்களை நற்கதிக்கு இட்டுசெல்லும். நடப்பதெல்லாம் பகவத் லீலைகளாக இருக்குமென்பதை மறக்கமுடியாது.

ஸ்ரீ ராதை முதலிய உத்தம கோபிகைகளின் ஜீவாத்மாவுக்கு பரமாத்மாவாக கூடி மாலை இடுதல்

ஸாதாரனையாக உத்தம பக்தர்கள் தன்னை பெண்ணுகவும் உபாஸனு தைவத்தை நாயகனுகவும் கூடி அதிரஹஸ்யமாக ரமித்துக்கொண்டு இருப்பார்கள். எல்லா பூத உடல்களை கோற்

கும்படியுள்ள யஞ்ஞோபவீதம் கண்டு அந்தர் முகத்திலேயே அந்த வாடாத புஷ்ப மாலையை நாயகனுக்கு சூட்டி அதிசயிப்பார்கள்! ஸர்வ வியாபியென்பதான தியானத்தை செய்வார்கள். எங்குமே நிறைந்த ஒளி என்னுடைய இந்த அடியாளுடைய ஹிருதயத்திலிருக்க இடம் போதாதே; என்பதை நினைக்கவேண்டாம் ப்ரபோ நீர் நினைத்தமாத்திரத்திலே எந்தப்படியுள்ள உருவத்திலும் புகுந்து காக்ஷியளிக்க கூடியவராக இருக்கிறீர். ஆகையினாலே என்னுடைய உருவத்திற்கு தக்கப்படி நீரும் அங்கிகரித்து உம்முடைய கிருபையானது என்னுள்ளே வந்து ஸமத்வமென்ற மாலையை கூட்டு இருவரும் ஒன்றாகும் தன்மையை விளக்கி ஒரே அகண்டகமாக சோபிக்க வேண்டும்! என்ற ராதை முதலிய பக்தைகளுக்கு நித்யாநந்தத்தை கொடுப்பதான தியானத்திலே தோன்றி மணாளனைபோல சோபித்தார். இந்தப்படி ராதை ஒருவளுக்கு மட்டுமல்லாது இன்னுமுள்ள கோபிகைகளுடைய இச்சைப்படி ஒருவளுக்கு குழந்தையாகவும் ஒருவளுக்கு ஸஹோதரனாகவும் ஒருவளுக்கு தோழனாகவும், ஒருவளுக்கு தைவமாகவும்

இன்னுமுள்ளவர்களுக்கு நாயகனுகவும் சோபித்தார். என்பதை நாம் மறக்கமுடியாது. அவரவர்களுக்கு பக்திக்கு தகுந்தபடி லீலைகளும் புரிந்து வந்தார்.

நைடுநாள் ப்ரம்மசர்யத்தையே அனுஷ்டித்து வரும் ஒருவனை, சுற்றி அழகுடைய பெண்மணிகளே மிகவும் வணக்கத்துடன் உபசரிப்பார்கள். ஸேவை புரிவார்கள்! ஸ்ரீ கிருஷ்ணன் இவ்வளவு கோபிகைகளையும்கூடி ஆநந்திப்பதின் காரணம் கண்ணனுடைய ப்ரம்மசர்யமே என்பதை நாம் அறியவேண்டும். ஸ்ரீ கிருஷ்ணன் நித்ய ப்ரம்மசாரி என்பதை விளக்க வேண்டுமென்று எண்ணம் கொண் ஸ்ரீநாதருஷி ஒவ்வொரு கோபிகைள் வீட்டிலும் புகுந்து சோதனை இட்டபோது ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு மாதிரி லீலைகளைகண்டு ஆநந்தமடைந்த நாரதன் ஸ்ரீ கண்ணனிடம் வந்து முறையிட்டார். ஓ வைகுண்டவாஸா. பக்தர்களுடைய ஹ்ருதயமென்னும் புண்டரீகத்தில் இருந்து கொண்டு பற்பல லீலைகளை செய்து கோபியர்களின் உள்ளத்தை கவர்ந்த ஸ்ரீ கிருஷ்ணு! நமஸ்காரம் ஒவ்வொருவளுடைய இச்

சைப்படி உருவம் தரித்து அதாதுக்கு தகுந்தபடி அவர்களிடம் லீலே புரியும் மாதவா உனக்கு நமஸ்காரம். லோகரக்ஷணேயின் பொருட்டு இப்பூவியில் மனித உருவம் தாங்கி துஷ்டர்களே சிக்ஷிக்கும் தாமோதரா! நமஸ்காரம்! என்னுடைய வாக்யம் பொய்யாகாதபடி உரலே கட்டிக்கொண்டு தாங்கியவராக தவழ்ந்து மரத்தை கீழே தள்ளி ரக்ஷித்த பக்தவத்ஸலா நமஸ்காரம். தன்னே கெடுக்க வரும் துஷ்டர்களே கொன்று தன்னேயும் தன்னே அடுத்த பக்தர்களேயும் ரக்ஷித்து கொள்ளும்படியான உம்முடைய தேஜஸுக்கு எப்பவும் நமஸ்காரம். பிதாமஹரான ப்ரம்மாவும் இந்திரன் முதலிய தேவர்களும் ஸதா உம்முடைய லீலா வீபூதிகளே போற்றும்படி செய்த கோவிந்தா உமக்கு நமஸ்காரம்.

இந்தப்படியுள்ள ஸ்ரீநாரதருடைய உண்மையான மொழியை கேட்டதும் ஓ ஸ்வாமி! தேவருஷே! வந்தனம். நீர் தேவர்களிடத்திலும் அஸுரர்களிடத்திலும் ஸமத்வ பாவனே ஏற்பட்டதினலேயே எங்கும் நிர்பயமாக ஸஞ்சரிக்கிறீர்! அவதார மகிமையின் பெருமையை விளக்கி அனுபூதியை பாடுகிறீர். இந்திர

போகத்திலோ அல்லது வேறொரு அழகுடைய பொருளிலோ தம் மனதை செலுத்தாமல் தன்னிடத்திலேயே பேரானந்தம் கொண்டு பரிபூர்ணமாக இருக்கிறீர் ! ஸ்வாமி மஹருஷே ! நமஸ்காரம் !

என்று திருவாய்மலர்ந்து அருளிய மொழியை கேட்டதும் ஸ்ரீ நாரத ப்ரம்மருஷியானவர் ஸ்ரீ கிருஷ்ண பரிபூர்ண வஸ்துவே உம்மிடம் நிறைந்திருந்து அவதார லீலா விபூதிகளை பூர்த்தி செய்யட்டும் என்று அருளி மறைந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணரும் பாண்டவருடன் சேர்ந்து துஷ்ட அரக்கர்களை மாய்த்து சிஷ்டர்களை செய்து, இந்த ராஜ்யம் முழுதும் ஒரே குடும்பமாக தர்ம பரிபாலனம் நிறைந்து அவரவரின் தொழிலை அவரவர்களைக்கொண்டு செய்யச்சொல்லி அவாவர்கள் அடையும் மார்க்கத்தையும் காட்டி ஸ்ரீராம ராஜ்யமாக சோபிக்க செய்தார்.

இதிலிருந்து நாம் அறியவேண்டிய விஷயமாவது இந்த மனித ஜன்மத்தை வீணாக்காது அழகுடைய விக்ரஹமான

ஸ்ரீ கிருஷ்ணனை ஹ்ருதய கமலத்திலே நிறைந்த ஜோதியென்னும் நிலாவின் மத்தியில் இருத்தி பூஜை முதலிய அனுஷ்டானங்களை செய்து நம்மையே அவருக்கு அற்பணமாகிய நேவீத்யத்தைசெய்து உபாஸன மார்க்கத்தை அடைந்து அவரருளாலேயே சைதன்ய மாகவே சோபிக்க அவரிடமுருந்துவரும் அனுபூதியே கூட்டி செல்லும் என்பதில் ஸந்தேகமில்லை. சாந்தி.

இதைப் படிப்பவரும் கேழ்பவரும் கேட்டு மனனம் செய்பவரும் நான் அடையும் கதியை அடைவார்களாக.

சாந்த கடவுள் அருள்புரிவாராக.

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

ஓம் தத் ஸத்

ஓம் சாந்தி